விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 23 வெள்ளிக்கிழமை (07.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 200

# சகல இனத்தவருக்கும் பொருத்தமான அதிகாரப் பகிர்வே அரசின் இலக்கு!

## தமிழ்ச்செல்வனின் கூற்றை அரசு நிராகரிப்பு

(கொழும்பு)

**சகல இனத்தவர்களுக்கும் பொருத்தமான ஓர் அரசியல் தீர்வைப் பெறுவதற்கான அதிகாரப் பகிர்வை முன்வைப்பதே அரசின் இலக்கு என தகவல் மற்றும் ஊடகத் துறை அமைச்சரும் அரசாங்கப் பேச்சாளருமான அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.**

**அரசாங்கத் திணைக்களத்தில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அரசு அதிகாரப் பகிர்வு விடயத்தில் ஏமாற்று நடைமுறையை பின்பற்றுவதாக விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் விடுத்த செய்தி உண்மைக்குப் புறம்பானது. இதனை அரசு நிராகரிக்கின்றது.

சகல இனத்தவர்களுக்கும் பொருத்தமான ஓர் அரசியல் தீர்வைப் பெறுவதற்கான அதிகாரப் பகிர்வை முன்வைப்பதே அரசின் இலக்கு என தகவல் மற்றும் ஊடகத் துறை அமைச்சரும் அரசாங்கப் பேச்சாளருமான அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாகக் *(10 ஆம் பக்கம் பார்க்க)*



தமிழர் தாயகம் எங்கும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்ட கரும்புலிகள் நாள் நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கலந்து கொண்டு கரும்புலி மாவீரர்களுக்குச் சுடர் ஏற்றி, மலர் மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## சிங்கள ஊடகவியலாளரின் கொலைக்கு இராணுவ அதிகாரி ஒருவரே காரணம்

### பாராளுமன்றத்தில் ரங்க பண்டார எம்.பி.

(கொழும்பு)

அவிசாவலையில் ஐந்து தமிழர்கள் தலை துண்டிக்கப்பட்ட சம்பவத்தின் குற்றவாளிகளை அறிந்திருந்ததால்தான் சிங்கள ஊடகவியலாளர் லக்மல் சம்பத்தை இராணுவத்தின் லெப்டினன் நிலை அதிகாரி ஒருவர் படுகொலை செய்தார் என்று பாராளுமன்றத்தில் பரபரப்பான தகவல் அம்பலமாகியுள்ளது.

பாராளுமன்றில் அவசரகாலச் சட்ட நீடிப்பு மீது நேற்று நடைபெற்ற விவாதத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சி *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## க.கா.குழுவில் இடம்பெறுபவர்களை அரசாங்கமும்-புலிகளுமே தீர்மானிப்பர்

### உல்ப் ஹென்றிக்சன் விளக்கம்

(கொழும்பு)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் எதிர்காலம் என்ன என்பது குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் விளக்கம் அளித்துள்ளார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பணிகள் முடிந்ததாகக் கருதவில்லை. கண்காணிப்புக் குழுவிற்கு பல மாற்றுத் தயாரிப்புக்கள் உண்டு. உரிய மாற்றங்களுடன் தொடர்ந்து கண்காணிப்புக் குழு இயங்க வேண்டும். தற்பேர்து மேற்கொள்ளப்பட்டு வரும் சிறிய அளவிலான நடவடிக்கையை விட உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து வலுவானதாகச் செயற்பட வேண்டும்.

கண்காணிப்புக் குழுவில் இடம்பெறுவோரைக் கண்காணிப்புக் குழுவினர் தீர்மானிப்பதில்லை. அனுசரணையாளர்கள் மற்றும் இருதரப்பினர்தான் தீர்மானிக்கின்றனர்.

வன்முறைகள் *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## கடற்படையின் அதிகாரி ஒருவர் வேலணையில் சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

வேலணைத் துறையூரில் கடற்படை அதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கடமை நிமித்தம் நின்றிருந்தவேளை இனந்தெரியாதோரால் சுடப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தினையடுத்து வேலணையில் முக்கிய சந்திகளில் பகல் சகிதம் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அராலிச் சந்தியில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த அனைவரும் பல மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டு தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இதேவேளை சூட்டுச் *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதம் நீடிப்பு

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான சட்ட மூலம் நேற்று பாராளுமன்றத்தில் 85 வாக்கு வித்தியாசத்தினால் நிறைவேறியது.

சட்டமூலத்திற்கு ஆதரவாக 102 வாக்குகளும் எதிராக 17 வாக்குகளும் அளிக்கப்பட்டது. ஆளும் கட்சியுடன் ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. என்பன இணைந்து இச் சட்ட மூலத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கையில் சமாதான முயற்சிகளுக்கு புத்துயிர் அளிக்க அமெரிக்கா கோரிக்கை

### முன்னாள் தூதுவர் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் சமாதான முயற்சிகளுக்கு உடனடியாக புத்துயிர் அளிக்கப்பட்டு அவை முன்னெடுக்கப்பட வேண்டும் என இலங்கையிலிருந்து மாற்றம்அடைந்து செல்லும் அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி லூன்செற் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் தனது பணிக்காலத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் அமெரிக்கத் தூதுவர், அமெரிக்கா இங்கிலாந்திடம் இருந்து சுதந்திரம் பெற்று 230 ஆண்டுகள் நிறைவு நிகழ்வை தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் கொண்டாடினார். அதில் உரையாற்றும் போதே ஜெவ்ரி லூன்செற் இதனை வலியுறுத்தியுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையில் சமாதானச் சூழ்நிலை காணப்பட்டது. யுத்த நிறுத்த உடன்படிக்கையும் சமாதானப் பேச்சுக்களும் நாடளாவிய ரீதியில் உடனடியாக இல்லாவிட்டாலும் மிக விரைவில் அது ஏற்பட்டுவிடும். அல்லது விரைவில் உறுதியான முன்னேற்றம் ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கை அப்போது மக்களிடம் விஞ்சிக் காணப்பட்டது.

ஆனால் தற்போது அந்நிலை இல்லாமல் போய்விட்டதாக அவர் கூறியுள்ளார். வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. நீக்கப்பட்டிருந்த வீதித் தடைகள் மீளவும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

பீதியும் அவ நம்பிக்கைகளும் மக்களிடையே வளர்ந்து வருவதால் பௌதிகத் தடைகள் மாத்திரமல்லாமல் ஒரு குடிமகனை இன்னொரு குடிமகன் பிரிப்பதற்கான தடைகளும் ஏற்படுத்தப்பட்டுவருவதாக அவர் கவலை தெரிவித்தார். (ச-5)

## ஐ.தே.க.எம்.பி. அரசுடன் இணைவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சிநிலமே நேற்று அரசுடன் இணைந்து கொண்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினுள் இடம்பெற்ற உள் முரண்பாடு காரணமாகவே அவர் அரசுடன் இணைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

அரசில் இணைந்து கொண்ட அவருக்கு கிராமிய பொருளாதார பிரதியமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இவர் நேற்றே தனது பதவியை ஏற்றுக் கொண்டுள்ளார். இதேவேளை ஐ.தே. கட்சியின் எம்.பி. சுசந்த புஞ்சிநிலமே அரசுடன் இணைந்துகொண்டமைகுறித்து அக்கட்சிஅங்கத்தவர்களிடையே கருத்துமுரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)




# போர்த்துக்கலை வெற்றி பெற்று பிரான்ஸ் இத்தாலியுடன் இறுதிப் போட்டியில் மோதல்

மிகவும் எதிர்பார்க்கப்படும் உலகக் கோப்பை உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் இத்தாலியுடன் மோதுவதற்கு பிரான்ஸ் அணி தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் முனிச்சில் நடைபெற்ற



அரையிறுதியில் அணித் தலைவர் ஜிடேன் பெனால்டி வாய்ப்பில் அசத்தலாகக் கோல் அடிக்க பிரான்ஸ் அணி போர்த்துக்கலை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

இதன் மூலம் பிரான்ஸ் அணி இறுதிப் போட்டிக்குள் அசத்தலாக அடியெடுத்து வைத்தது. இத் தொடரில் கலக்கலாக ஆடிய போர்த்துக்கல் அதிர்ஷ்டம் இல்லாமல் தோல்வியைச் சந்திக்க நேரிட்டது.





பரபரப்பான இரண்டாவது அரையிறுதியில் முன்னாள் சம்பியன் பிரான்ஸ், போர்த்துக்கல் ஆகிய அணிகள் மோதின. இதில் வெற்றி பெற்றால் இறுதிப் போட்டிக்கு முன்னேறலாம் என்பதால் இரு அணிகளும் ஆரம்பத்திலிருந்தே அனல் பறக்க ஆடின.

முதல் நான்கு நிமிடத்தில் மாறி மாறி தாக்குதல் நடத்தின. பிரான்ஸ் பிளாரன்ட் மலுடாவின் சொட் கோல் போஸ்ரில் பட்டு விலகிச் சென்றது.

அடுத்து போர்த்துக்கலின் டீகோ அடித்த பந்தை பிரான்ஸின் அனுபவ கோல்கீப்பர் பார்த்தாஸ் அருமையாகத் தடுத்து விட்டார். தொடர்ந்து போர்த்துக்களின் மனிச், கிறிஸ்டியானோ றொனாட்டோ சொட் அடிக்க ஆட்டத்தின் ஒவ்வொரு நிமிடமும் ரென்சன் நிறைந்ததாகவிருந்தது. ஆட்டத்தின் 33 வது நிமிடத்தில் பிரான்ஸிக்கு அடித்தது அதிர்ஷ்டம்.

பிரான்ஸின் தியறிஹென்றி பந்தை புயல் வேகத்தில் கொண்டு வந்தார். அப்போது பெனால்டி ஏரியாவில் வைத்து போர்த்துக்கலின் தற்காப்பு வீரர் றிக்கார்ட்டோ கார்வல்கோ



முரட்டுத்தனமாக மடக்கினார். ஹென்றி கீழே விழ அதை உன்னிப்பாக பார்த்த நடுவர் யார்ச் லாறியன்டொ பிரான்ஸிக்கு பெனால்டி வாய்ப்பு வழங்க போர்த்துக்கல் நெஞ்சங்கள் கொதித்தெழுந்தன.

சாதாரணமாகத்தான் தடுக்க ஹென்றி விழுந்தார். இதற்குப் போய் பெனால்டியா? என வாதம் செய்தும் பலன் கிடைக்கவில்லை. இப்போது போர்த்துக்கலின் நட் சத்திர கோல் கீப்பர் றிக்கார்ட் டோவின் கையில் தான் ஆட்டம்.

எதிரே இத் தொடருடன் ஓய்வு பெறவுள்ள பிரான்ஸ் அணித் தலைவர் ஜிடேன் பந்தை அடிக் கின்றார். பந்து பறந்து வருகின்றது. அதன் திசையை சரியாகக் கணித்த ரிக்கார்ட்டோ வலது பக்கமாக டைவ் அடித்து தடுக்கப் பார்த்தார்.

ஆனால் ஜிடேனின் சொட் வீணாகுமோ? ரிக்கார்டாவைக் கடந்து அழகான கோலாக பிரான்ஸ் 1:0 என்ற முன்னிலை பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்க போர்த்துக்கல் கடுமையாகப் போராடியது.

பிகோ போன்றவர்கள் ஏமாற்றியதால் பிரான்ஸ் தற்காப்புப் பகுதியை அவ் வளவு எளிதில் தகர்க்க முடியவில்லை. முதற்பாதி பிரான்ஸ் முன்னி லையுடன் (1:0) முடிந்தது.

இரண்டாவது பாதியில் பிரான்ஸ் தற்காப்பு ஆட்டம் ஆடியது. வெற்றிக்கு ஒரு கோல் போதும் என நினைத்தது. அதே நேரத்தில் போர்த்துக்கல் தொடர்ந்து தாக்குதல் நடத்தியது. வீரர்களை மாற்றிப் பார்த்தும் இந்த அணிக்கு பலன் கிடைக்கவில்லை.

ஆட்டத்தின் 77வது நிமிடத்தில் போர்த்துக்கலுக்கு அருமையான வாய்ப்பு. பிறி-கிக் வாய்ப்பில் கிறிஸ்டியானோ றொனாட்டோ பந்தை அடிக்கின்றார். பிரான்ஸ் கோல் கீப்பர் பார்த்தாஸ் கையில் இருந்து நழுவி பந்து மேலே செல்கிறது. இம் முறை பிகோ தலையால் முட்ட பந்து கோல் போஸ்டில் பட்டுச் செல்ல போர்த்துக்கலின் அரிய வாய்ப்பை



வீணாக்கியது.

இரண்டாவது பாதி முடியும் நேரத்தில் போர்த்துக்கல் வீரர்கள் அடித்த சொட் எல்லாம் கோல் போஸ்டிக்கு மேலே பறக்க வெற்றியும் பறந்து போனது. பிரான்ஸ் அணி போர்த்துக்கலை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் அசத்தலாக நுழைந்தது.

# ஜாம்பவான்கள் ஜொலிக்காததன் காரணம்!

நல்ல சந்தர்ப்பங்கள் வீரர்களுக்குக் கிடைப்பது அரிது. ஒருமுறை சந்தர்ப்பம் கிடைத்தால் கூட திறமையான வீரர்கள் அதை நழுவ விடமாட்டார்கள். ஆனால் இந்த உலகக்கோப்பையில் அடி சறுக்கிய யானைகள் அதிகம். ஆர்ஜின்டினா, பிறேசில் வீரர்கள் கூட ஜொலிக்கத்தவறியது சர்வதேச ரசிகர்களிடம் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. பிறேசிலில் றொனால் டினோ முதல் இங்கிலாந்தின் பிராந் லம் பார்டு வரை பல வீரர்கள் உலகக்கோப் பையில் சோபிக்கமுடியாமல் போன அதிர்ச் சியில் இருந்து இன்னமும் மீளவில்லை சில வீரர்கள் நல்ல நிலையில் இல்லை.

சில வீரர்கள் காயமடைந்திருந்தனர். வீரர்கள் தங்கள் திறமையை முழுமையாக வெளிப்படுத்தும் முன்னர் தொடரில் இருந்து அணிவெளியேறியிருந்தது ஆகியன எதிர்பார்த்தவீரர்கள்பிரகாசிக்காமல் போனதற்கான காரணங்களில் சில இன்னும் 3 போட்டிகள் மட்டுமே மீதம் இருக்கும் நிலை யில் ஏதாவது ஒரு வீரர் அபார சாதனை புரிந்திருக்கிறார் என்று சொல்லமுடிய வில்லை. இன்னும் இந்தத்தொடரில் ஹட் டிரிக் கோல் எந்த அணி வீரரும் அடிக்க வில் லை ரசிகர்கள் இதை மிகவும் எதிர்பார்த் தார்கள்.

ஜிடேன் போன்ற அனுபவம் வாய்ந்த வீரர்கள்சிலர் ரசிகர்களைஏமாற்றவில்லை. பிறேசில் வீரர் டோனால் டினோ தொடர்ச் சியாக இரு ஆண்டு பிபா சிறந்த வீரராக தேர்வு செய்யப் பட்டிருந்தார். அவருக்கு இந்த போட்டியில் என்ன ஆனது என்றே தெரியவில்லை. குறோசியாவுக்கு எதி ரான முதல் போட்டியில் பிறேசிலுக்கு வழங்கப் பட்டபோது அதை ரோனால் டினோ கோல் ஆக்கிவிடுவார் என்ற எதிர்பார்ப்பு ஸ்ரேடியம் முழுக்க நிரம்பி இருந்தது. ஆனால் அவர் வீணாக்கிவிட்டார். இதே கதை தான் பிறேசில் அணி வெளியேறும் வரை நீடித்தது. பிறோசில் அணியை பொறுத்தவரை அந்த அணியில் உண்மையான விளையாட்டு இந்தத்தொடரில்வெளிப்படவில்லை.

நீண்ட காலம் எந்தப்போட்டியிலும் தோற்காமல் விளையாடிவிட்டு உலகக் கோப்பையை தோற்றது மிகவும் வருத் தத்தை ஏற்படுத்தியுள்ளது என்று கூறி னார். ரோனால்டினோ பிறேசில் சம்பி யனாகவேண்டும் என்று ஆசைப்பட்டேன் என்று தனது நிறைவேறாத ஆசையைப் பற்றி தெரிவித்தார் ரோனால்டினோ.

பிபா சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்ட மற்றொரு வீரர் இங்கிலாந்து அணியின் லம்பார்டு கடந்த உலகக்கோப்பைத் தொடரில் பங்கேற்றமுடியாமல் போனாலும் இந்த உலகக் கோப்பையில் சாதிப்பார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அது முடியாமல் போய்விட்டது .

**அமிர்தன்**

ஒரு கோல் கூட லம்பார்ட் அடிக்கவில்லை. போர்த்துக்கலுக்கு எதிராக கிடைத்தபெனால்டி வாய்ப்பில் கூட சொதப் பிவிட்டார். அது கோல் கீப்பரால் தடுக் கப்பட்டது. இன்னொரு இங்கிலாந்து வீரர் ரூனே ஜொலிக்காமல் போய் விட்டார்.

போர்த்துக்கலுக்கு எதிரான போட்டி யில் சிவப்பு அட்டை கொடுத்து அனுப்பப் பட்ட ரூனே ஒருவேளை வெளியேற்றப்படாமல் களத்தில் ஆடியிருந்தாலும் அவருடைய காயம் அவரை கோல்போட விட்டிருக் குமா என்பது தெரியவில்லை. உக்ரைன் அணி செவசெங்கோ அபாரமாக எதிர்பார்க்கப் பட்ட மற்றொரு வீரர் 2004ஆம் ஆண்டு ஐரோப்பிய கால்பந்துவீரர் என்ற பட்டம் பெற்றவர் தொடரில் கலந்துகொள்வதற்கு முன்பே அவர் முழங்காலில் காயப்பட்டிருந்தது.

இவருடைய முழு ஆட்டத்தினையும் இந்தப் போட்டியில் பார்க்கமுடியவில்லை. உக் ரைனுக்கு எதிராக ஒரு பேனால்டி கூட போடாத சுவிற்ஸர்லாந்துக்கு எதிராக செவசெங்கோ ஒரு பெனால்டி வாய்ப்பை தவறவிடும் அளவுக்கு அவரது ஆட்டம் மோசமாக இருந்தது.

சில வீரர்கள் ஜொலிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்காமலேயேபோய்விட்டது என்றே சொல்ல முடியும். நெதர்லாந்தைச் சேர்ந்த ஆர்ஜன் ராபன் செக்குடியரசைச் சேர்ந்த டோமாஸ் ரோசிக்கு முதலில் நன்றாக ஆடினார்கள் என்றாலும் அடுத்த சுற்றில் நுழைய முடியாததால் பரிதாபமானார்கள் ஆர்ஜன்டீனாவின மெய்ஸ்சி சிறப்பாக ஆடினார்.

ஆனால்பயிற்சி யாளர்ஜோர்ஸ் பெகர்மேன் அவரை பதில் வீர ராக மட்டுமே இறக்கியதால் அவர் ஜொலிக்க வில்லை அணியும் போன இடம் தெரியவில்லை.

சர்வதேச அள வில் திறமையாக ஆடிய வீரர்கள் கூட பெனா ல்டி கோல் கூட அடிக்க முடியாமல் போனதற்கு காரணம் என்ன சொல்ல முடியும் யானைக் கும் அடிசறுக் கும்.... என்பதைத்தவிர.

# கேரளாவில் கைதான ஈழத்தமிழரை தீவிரமாக விசாரிக்கும் தமிழகப் பொலிஸார்

(சென்னை)

இலங்கையிலிருந்து வந்து சென்னை வழியாக கேரளாவிற்குள் ஊடுருவியவேளை கேரள பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட நபர், விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினரா? என்ற கோணத்தில் மத்திய, மாநில உளவுப் பிரிவு பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சென்னையிலிருந்து கேரளாவுக்கு வந்து கேரளாவில் உள்ள கொச்சியிலிருந்து போலிக் கடவுச் சீட்டு மூலம் லண்டன் செல்ல முயன்ற வேளையே இலங்கை நபரான உதயசங்கர் (வயது 40) என்பவரை கொச்சி பொலிஸார் கைதுசெய்தனர். அவரிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில்,

தமிழக சட்டசபை தேர்தலுக்கு முன்பாகவே இலங்கையிலிருந்து சென்னை வந்து புறநகர் பகுதியில் தான் தங்கியதாகவும் போலிக் கடவுச் சீட்டு பெற்ற பின்னர் சென்னையிலிருந்து கேரளா சென்றதாகவும் அப்போது தான் கைது செய்யப்பட்டதாகவும் உதயசங்கர் கூறியிருந்தார்.

இதையடுத்து கொச்சி பொலிஸார் உதயசங்கரை விசாரணைக்காக சென்னைக்கு அழைத்து வந்தனர். சென்னையில் ரகசிய இடத்தில் வைத்து அவரிடம் விசாரணை நடத்தினர். மத்திய மாநில உளவுப் பிரிவு அதிகாரிகள் உதய சங்கரை விசாரித்தனர். உதய சங்கர் சென்னையில் தங்க அனுமதி கொடுத்த நபர் யார்? என்பது குறித்து தீவிர விசாரணை நடந்து வருகிறது.

தற்போது கொச்சி பொலிஸார் உதய சங்கரை கேரளாவிற்கு அழைத்துச்சென்றுள்ளனர். இலங்கையிலிருந்து தமிழ கத்திற்குள் ஊடுருவிய உதயசங்கர் விடுதலைப் புலியா என்ற சந்தேகம் வலுத்துள்ளதால் இது குறித்து மாநில பொலிஸாரும் விசாரித்து வருகின்றனர். (க-7)

## பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில்

# தமிழ் மொழி மூலம் பயிற்சிபெற்ற 185 பேருக்கு ஆசிரியர் நியமனம்

பத்தனை ஸ்ரீபாத கல்வியியற்கல்லூரியில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சி பெற்று வெளியேறியுள்ளவர்களுக்கான ஆசிரியர்நியமனங்கள்வெகு விரைவில் வழங்கப்படவுள்ளது.

பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் 2003ஆம் 2005 ஆம் கல்வி ஆண்டில் தமிழ் மொழி மூலம் பயிற்சி பெற்றவர்களுக்கான ஆசிரியர் நியமனங்கள் ஊவா சப்பிரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள தமிழ் பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

இதன்படி ஆசிரியர் நியமனங்கள் பெறவுள்ளவர்களின் தகைமைகளை பரிசீலிப்பதற்காக நேர்முகப் பரீட்சைகள் மத்திய, ஊவா, சப்பிரகமுவ ஆகிய மாகாணங்கள் ரீதியாக இடம்பெறவுள்ளன. சம்பந்தப்பட்டவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் மாகாணக் கல்வி அமைச்சுக்களின் செயலாளர்களினால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பத்தனை ஸ்ரீ பாத கல்வியியற் கல்லூரியில் ஆரம்பக் கல்வி முதன் மொழி, சமூகக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், நடனம், சங்கீதம் ஆகிய பாடநெறிகளை தமிழ் மொழிமூலம் பயிற்சி பெற்ற 185 பேருக்கே இந்த ஆசிரியர்நிய மனங்கள் வழங்கப்படவுள்ளன. (க-7)

# விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

கல்விப் பொதுத் தராதர உ... தரப் பரீட்சைக்கு 2007ஆம் ஆண்டில் வெளிவாரியாகத் தோற்றுவோருக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர் வரும் 21ஆம் திகதி வரைநீடிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சையில் வெளிவாரியாகத் தோற்றுவோருக்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஜுன் 10ஆம் திகதியென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இக் கால எல்லைக்குள் விண்ணப்பிக்க முடியாத விண்ணப்பதாரிகளின் நலன்கருதி கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. (க-9)

# இராசி பலன்

**07.07.2006**
**(ஆனி 23, வெள்ளிக்கிழமை)**
**ஏகாதசி பிற்பகல் 12.16 மணிவரை**
**விசாகம் பிற்பகல் 1.10 மணிவரை**
**இராகுகாலம் 10.28-11.58மணிவரை**
**சுபநேரம் 5.58-7.28 மணிவரை**
**சயன ஏகாதசி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | காரிய தடங்கல், பிரயாண பயம், அரோக்கியக்குறைவு, வீண்பகை. |
| இடபம் | சௌக்கிய விருத்தி, போசனசுகம், காரிய அனுகூலம், தெய்வதரிசனம். |
| மிதுனம் | உடல்நலம், மனமகிழ்ச்சி, சத்துரு ஜெயம், காரிய அனுகூலம். |
| கடகம் | சிறுவியாதி, மனச்சோர்வு, முயற்சி தாமதம், வியாபாரநன்மை. |
| சிங்கம் | கல்வியில் ஆர்வம், மாதசுகம், அபிலாஷை, முயற்சி தாமதம். |
| கன்னி | பிரயாண நன்மை, சகோதார் உதவி, தெய்வசிந்தை, இனிய சம்பவம். |
| துலாம் | மாதர்நட்பு, தனவிரயம், முயற்சி தாமதம், குடும்பக்கவலை. |
| விருச்சிகம் | தெய்வசிந்தை, பெரியோர் உதவி, சயனசுகம், நல்ல முயற்சி. |
| தனுசு | காரிய அலைச்சல், சயனசுகக்குறைவு, சுபசெலவு, சொத்துக்களால் கவலை. |
| மகரம் | உறவினர் வருகை, தெய்வதரிசனம், எடுத்த காரியம் கைகூடும், கீர்த்தி. |
| கும்பம் | நல்ல செய்தி, அதிக பிரயாசை, மேன்மை, நண்பர்கள் உதவி. |
| மீனம் | கட்டுப்பாடு, சரீரப்பிரயாசை, ஆழ்ந்த சிந்தை, திடீர்பயணம். |

- வளவன்

# வீதி விஸ்தரிப்புக்கு முன்னர் இழப்பீடுகள் வழங்கப்படும்

வீதி விஸ்தரிப்பு நடவடிக்கைகளின் போது சொத்துக்களை இழப்பவர்களுக்கான நஷ்டஈடுகளை, அந் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் வழங்குவதற்கு அரசாங்கம் முடிசெய்துள்ளது. இதற்குஅமைய அரசாங்கம் காணிகளை பொறுப்பேற்றுக்கொள்ளும் சட்டத்தை கொள்கை அடிப்படையில் முறைப்படுத்த இருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் எம்.பி.எஸ். பனண்டொ தெரிவித்தார்.

இதற்கமைய நுகைகொட மேம்பால நிர்மானப் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் வீடுகள், கட்டடங்கள் மற்றும் சொத்துக்களை இழக்கும் அப்பகுதி மக்களுக்கு அரசு நஷ்ட ஈடுகளை வழங்கவுள்ளது. இதற்கு தேவையான நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியை சீன அரசாங்கம் வழங்கியுள்ளது. (க-9)

# குருபூரணைவிழாவும் திருவிளக்குப் பூஜையும்

தாவடி, கொக்குவில் ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமம் நடாத்தும் குருபூரணை விழாவும் திருவிளக்குப் பூஜையும் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சேவாச்சிரமம் இயங்கும் தாவடி இ.த.க.பாடசாலை பழைய கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பஜனையும், திருவிளக்குப் பூஜையும், தீப ஆராதனையும் நடைபெறவுள்ளதுடன் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. யாழ்.பல்கலைக் கழகம் கணித புள்ளிவிபரவியற் துறைத் தலைவர் கலாநிதி சிவக்கொழுந்து ஸ்ரீ சற்குணராசா 'நாம ஜெய பத்தின் மகிமை' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (க-7)

# குரு பூர்ணிமா தினம்

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையம் நடாத்தும் குரு பூர்ணிமா தினம் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை9.00 ற்கு பிரசாந்திக்கொடியேற்றமும் 9.10ற்கு ஓம் காரம் அஷ்டோத்திரமும் 9.30 இற்கு ஸ்லோகங்கள் ஓதுதல், பஜகோவிந்தமும் 11.00 ற்கு பஜனையும், 11.45ற்கு நாடகமும் அதனைத் தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

சிறப்பு சொற்பாழிவை வட பிராந்திய சத்திய சாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக்குழுவின் ஆன்மீக கல்வி இணைப்பாளரான திருமதி. ம.இராசரத்தினம் நிகழ்த்துவார். தொடர்ந்து பாலவிகாஸ் அமைப்பாளர் மற்றும் சாயிசேவா நிலையத் தலைவர் ஆகியோரின் உரையும் அதனைத் தொடர்ந்து குருமார் கௌரவிப்பும் மகா மங்கள ஆராத்தியும் நாராயண சேவையும் இடம்பெறவுள்ளது. (க-7)

## மணி பல்லவத்தில் மஹோற்சவம்







## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## இன்று பன்னிரெண்டாம் திருவிழா

# நான்மறை சேர் திரு நாமங்கள்

பயிரவி! பஞ்சமி! பாவிங்
குசை! பஞ்சபாணி! வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர் சண்டி
காளி ஒளிரும் கலா
வயிரவி மண்டலி மாலினி
சூலி! வாரகி என்றே
செயிர் அவி நான்மறை சேர்திரு
நாமங்கள் செப்புவரே!

*அபிராமி அந்தாதி*

# இன்னருள் தந்திடம்மா!

சிங்கத்தில் நாகத்தின்
செங்கமலப் பூவினிலே
மங்கையுமை வலம்வந்து
வற்றாத அருள் சொரியும்
வங்கமலி கின்ற கடல்
வாழ்நயினை நாகம்மா!
எங்களினம் ஈடேற
இன்னருளைத் தா அம்மா!

*நயினை - இராகுலன்*

# உதவிடம்மா!

அலை மோதும் நயினைக் கரைதனிலே
சிலை வடிவாய் அருள்பவளே
அலை மோதும் மனங்களுக்கு ஆறுதலை
மலை மகளே மனமுவந்து அளித்திடம்மா!
பெம்மானின் இடப்பாகத்து உறைபவளே
இம் மானிலத்தில் அமைதி வேண்டும்
அம்மா நயினை நாகபூஷணித்தாயே
உம்மால் முடியாதா? உதவிடம்மா!

*கோவையூர் ரி.சுகப்பிரதா*

# துயர் தொலைத் தருள்புரி

அலையோங்கி அன்புமணி ஆர்க்கும் அந்தமிலாக்
கலை தேங்கு நயினைக் கவின்பதியில் - சிலையுருவில்
நிலைத்தருள் பொழியுமெம் நீலிநாக பூஷணியே!
தொலைத்தருள் புரிவாயெந் துயர்

*தா.தேவமதுரம் (அரியாலை)*

# "வந்தெமக்கு அருள்வாயம்மா"

மண்ணளந்த மாதவனின் தங்கையானாய்
மண்பிசைந்து கணபதிக்கு உயிர்கொடுத்தாய்
விண்வரைக் காக்கவந்த கந்தனுக்கு
வீர வேல் கொடுத்தவுணர் குல மறுத்தாய்
மண்ணுலகும் விண்ணுலகும் கண்டறியா
விரிசடையோன் பாதிசேர் மெய்யுமானாய்
எண்ணில்லா வடிவமெலாம் எடுக்கும்
நயினையம்மா வந்தெமக்கு அருள்வாயம்மா!

*அரியாலையூர் சி.சிவதாசன்*

# நலம் தருவாய் அம்மா!

அன்னை உனைத் தேடி நிதம்
அலைகடல் தாண்டி உன் கோவில் நாடி
ஓடோடி வருகின்றோம் பக்தியுடன்
பவள நிறத்தவளே அம்பிகையே
ஒளிர் தங்க நகைகள் அணிந்து
வாசமுறு மலர்மாலைகளும் சூடி
நயினைப் பதியினிலே வீதி உலாவரும்
எழில் கொஞ்சும் காட்சி கண்டு
மனமுருகி வேண்டுகிறோம் நாம்
நலம் பல தருவாய் அம்மா நீயே

*நயினை விஜயன்*

## இன்று ஒரு தகவல்

# இயல்பு மாறலாமா?

ஒருவர் இருந்தார். விலங்குகள் மீது அவருக்கு மிகுந்த பிரியம். அதனால் தன் வீட்டில் ஒரு நாயை வளர்த்தார். அதேபோல் கழுதையையும் வளர்த்தார். அந்தக் கழுதை அவரது வீட்டின் கொல்லைப்புறத்தில் இருக்கும் ஏதாவது பொதி சுமக்கும் வேலை இருந்தால் அது கவனித்துக்கொள்ளும்.

அந்த நாய் வீட்டுக்குள்ளே இருக்கும். நாய்க்கு அந்த வீட்டில் ராஜ உபசாரம்தான். அதற்கு ஏகப்பட்ட மரியாதை. குளிப்பதற்கு சோப்பு உண்டு. இரண்டு வேளையும் பால்,பிஸ்கட், மத்தியானம் சாப்பாடு. அதற்கு ஏதாவது உடல்நிலை சரியில்லை என்றால் உடனடியாக ஆஸ்பத்திரி வைத்தியம். மிகவும் கொடுத்து வைத்த நாய்.

அந்த வீட்டுத் தலைவர் வெளியில் காற்று வாங்கச் சென்றால் நாயும் கூடச் செல்லும். இவர் எங்காவது வெளியில் சென்றுவிட்டு வந்தால் உடனே ஓடி வரும். அப்படியே எழுந்து முன்னங்கால் இரண்டையும் அவரது தோள் மீது போட்டுக்கொள்ளும். அவர் சிரித்துக்கொண்டே தலையில் செல்லமாகத் தட்டுவார். இவர் கதிரையில் அமர்ந்து டி.வி. பார்க்கும் போதும் பத்திரிகை வாசிக்கும் போதும் அவரது காலடியில் படுத்துவிடும்.

அந்த நாய் படுப்பதற்கென்றே ஒரு மெத்தை. சில சமயம் அது அங்கே இருக்கின்ற மேசை, கதிரைகளில் ஏறி விளையாடும். சோபாவில் ஏறி உட்கார்ந்து கொள்ளும். இவ்வளவு செல்வாக்கு அந்த நாய்க்கு.

இவற்றைப் பார்த்த அந்தக் கழுதை யோசிக்க ஆரம்பித்துவிட்டது. "என்ன இது... இந்த வீட்டில் நான் கழுதையாக உழைக்கின்றேன். பொதி சுமக்கின்றேன். நமக்கு ஒரு நல்ல சாப்பாடு கிடையாது. படுக்கை கிடையாது. ஒருநாள் கூட எனது தலையையோ முதுகையோ யாரும் தடவிக்கொடுத்தது கிடையாது.

ஆனால் அந்த நாய் இந்த வீட்டுக்காக ஒரு துரும்பு கூட அசைத்ததில்லை. அதை இந்த வீட்டில் உள்ளவர்கள் இப்படி தலையில் வைத்துத் தாங்குகின்றனரே" என்று யோசித்தது. உடனே ஒரு முடிவுக்கும் வந்தது."சரி...இனி நாமும் அந்த நாய் மாதிரியே நடந்துகொள்வோம். அப்போதாவது நமக்கும் அதுபோல் மரியாதை கிடைக்கின்றதா பார்க்கலாம்" என்று திட்டம் தீட்டியது. அந்தத் திட்டத்தை செயற்படுத்தவும் ஆரம்பித்தது. அதாவது அந்த வீட்டில் நாய் என்னென்ன செய்ததோ அதையெல்லாம் இதுவும் செய்ய ஆரம்பித்துவிட்டது.

அந்த வீட்டு எஜமான் வெளியில் போய்விட்டுக் களைப்புடன் வீடு திரும்பினார். உடனே இந்தக் கழுதை அவரிடம் ஓடியது. அந்த நாய் என்ன செய்யுமோ அதுபோலவே செய்தது. அதாவது அந்த ஆளின் தோள் மீது த்னது முன்னங்கால் இரண்டையும் தூக்கிப்போட்டது.

அந்த ஆள் பயந்து போய்விட்டார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. சிறிது ஒதுங்கி நின்றார். இது அவரைச் சுற்றி சுற்றி வந்து வால் ஆட்டியது. அவர் கிடுகிடென்று வீட்டுக்குள் ஓடினார். இதுவும் பின்னால் ஓடியது. அங்கு போய் நாய் மாதிரி மேசை, கதிரை மீது ஏறி விளையாடியது. சோபாவில் எறி அமர்ந்தது. மேசையில் இருந்த பொருட்கள் எல்லாம் கீழே விழுந்துடைந்தது. கழுதை மேசை மீது ஏறினால் என்ன ஆகும்?

அந்த ஆள் பார்த்தார். சரி... இந்தக் கழுதைக்கு என்னவோ ஆகிவிட்டது என்று முடிவு செய்தார். ஒரு பெரிய கயிற்றை எடுத்துக்கொண்டு வந்து கால்களிலும் கழுத்திலும் கட்டினார். தரதரவென்று இழுத்துக்கொண்டு போய் கொல்லைப்பக்கத்தில் கட்டிப் போட்டார். அன்ன ஆகாரம் எதுவும் கொடுக்கவில்லை. இப்போது அந்தக் கழுதை யோசித்தது.

"என்ன இது? நமது எஜமானனுக்கு என்னவாகி விட்டது? அந்த நாய் பழகுவது போல்தானே நானும் பழகினேன்.ஆனால் இவர் நாயை அடிக்கவில்லை. ஆனால் என்னை அடித்துக் கட்டிப்போட்டு விட்டாரே என்ன காரணம்" என்று நினைத்தது.


எதற்கு இந்தக் கதை என்றால் இதுபோலவே நாம் சில சமயங்களில் யோசிப்பது உண்டு. நமது இயல்பு மாறி நடக்க ஆரம்பித்துவிட்டால் பல சமயங்களில் இப்படி ஆகிவிடும். அதனால் ஒரு மனிதன் எப்படி நடந்துகொள்ளவேண்டுமோ அப்படி நடந்துகொள்வது தான் மரியாதை. வெறிநாய் கடித்துவிட்டால் மனிதனும் அதுபோலவே ஆகிவிடுவான். அவனது இயல்பு மாறிவிடும்.

ஒருவனைப் பார்த்து இன்னொருவன் கேட்டான் "வெறி நாய் ஒன்று உன்னைக் கடித்துவிட்டால் நீ என்ன செய்வாய்?"எனறு. "நான் உடனே பேப்பரும் பேனாவும் கேட்பேன்"என்றான் அவன். "ஏன் உயில் எழுதுவதற்கா?" என்று கேட்டான் அடுத்தவன்! "இல்லை. நான் யார் யாரைக் கடிக்க வேண்டுமென்று பட்டியல்தயாரிப்பதற்கு" என்றான் இவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சமாதானத்தை உருவாக்குவதற்கு ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகின்றார்

## அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்றதிலிருந்து நிரந்தர சமாதானமொன்றை ஏற்படுத்துவதற்காக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றார்.

நிரந்தர கௌரவமான சமாதானத்திற்கான ஆரம்ப முயற்சியாக சர்வகட்சி மாநாட்டை ஏற்பாடு செய்தார். அதன் ஆறு கட்டங்கள் தற்பொழுது நடைபெற்றுள்ளன. அதில் பெறப்பட்ட தீர்மானங்களுடனே அரசாங்கம் ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்கு சென்றது என அமைச்சரும் அரசாங்கத்தின் பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள பாதுகாப்புப் பிரிவின் ஊடகப் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் பாதுகாப்புப் படைகளின் பேச்சாளர்கள் கலந்து கொண்டனர். மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே மேற்படி கருத்தை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

சர்வகட்சி மாநாடு தொடர்ந்து நடைபெற்று வரும்அதேவேளை, ஜனாதிபதியினால் மேலதிகமாக 12 பேர்கள் கொண்ட ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழு தேசியப்பிரச்சினைக்கு தீர்வொன்றினைப் பெற்றுக்கொள்வதற்காகசர்வகட்சிமாநாட்டிற்கு தேவையான தகவல்களை ஆராய்ந்து முன்மொழியும்எனக் கூறிய அமைச்சர், நாட்டின் தலைவர் மற்றும் நாட்டின் நிர்வாகி என்ற வகையில் நாட்டின் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்கு இலங்கையினராலே எமக்குப் பொருத்தமான அதிகாரப் பகிர்வுத் தீர்வொன்றைக் கொண்டு வருவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சி செய்து வருகின்றார் எனக் குறிப்பிட்டார்.

இப் பன்னிரண்டு பேர் கொண்ட குழுவின் கூட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாயன்று ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.(கு)

# அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் எஸ்.தெய்வநாயகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் 6 ஆயிரத்து 700 பேருக்கு மாதாந்தக் கொடுப்பனவு, சீருடை, அடையாள அட்டை என்பன வழங்கப்படவுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.தெய்வநாயகம் கூறினார்.

அம்பாறை மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு கல்முனை இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போது உதவிப் பணிப்பாளர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு உதவிப் பணிப்பாளர் எஸ். தெய்வநாயகம் மேலும் பேசுகையில், இந்து சமய கலாசார திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தலைமையில் அறநெறிப் பாடசாலைகள் மறுமலர்ச்சி கண்டு வருகிறது.

பல புதிய திட்டங்களை அவர் நடைமுறைப்படுத்தி வருகின்றார். அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்து ஆத்மீக உணர்வுகளை, விழுமியங்களை கூடுதலாக ஏற்படுத்த எமது திணைக்களம் முயற்சி செய்து வருகிறது.

இதுவரை காலமும் அறநெறி ஆசிரியர்கள் எவ்வித கொடுப்பனவும் இன்றி, சீருடையின்றி, அடையாளமின்றி அரிய சேவையினை வழங்கி வந்தனர். அந்தக் குறை விரைவில் நீங்கும்.


எனவே அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் இந்து தத்துவங்கள் தொடர்பாக மேலும் பல விளக்கங்களைத் தெளிவாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் மாணவர்களுக்குரிய விளக்கங்களை வழங்கமுடியும் என்றார். (க-7)


# களுத்துறையில் கைது செய்யப்பட்ட தமிழ்ப் பெண்ணுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

களுத்துறையில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய தமிழ்ப் பெண்ணொருவரை கொழும்பு விசேட நடவடிக்கை பிரிவினர் கைதுசெய்து களுத்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது இம் மாதம் 13ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு களுத்துறை மஜிஸ்திரேட் ஈ.எஸ்.த.சொய்ஸா கடந்த 12ஆம் திகதி உத்தரவிட்டார்.

சந்தேக நபர் மத்துகம இந்தகொட பிரதேசத்தில் வசிப்பவர் எனவும் இதுபற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சந்தேக நபரை ஆஜர் செய்த பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். (க-7)





யாழ். மாநகர சபையினால் திண்மக் கழிவகற்றல் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு யு.என். டி.பி. யினால் வழங்கப்பட்ட கழிவுப் பொருட்கள் சேகரிப்பு தொட்டிகள் நீண்ட காலத்திற்குப் பின் தற்பொழுது நகரின் பல இடங்களில் நிறுவப் பட்டுள்ளதையும், அதன் உபயோகம் தெரியாத நிலையில் தொட்டிக்கு அருகாமையில் குவிக்கப்பட்ட குப்பைகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:- திலீவின்பன்)




# அன்பு காட்டுவது அடிமைத்தனம் ஆகாது!



மனைவியானவள் கணவரிடம் மரியாதை வைத்திருப்பதும். அவரது அன்புக்குப் பாத்திரமாக நடந்துகொள்வதும் ஒரு போதும் அடிமைத்தனம் ஆகாது.

'அவருக்கு நான். எனக்கு அவர்... அவருக்குச் செய்யாமல் யாருக்குச் செய்யப்போகிறேன்?' என்று நினைக்கும் பெண்கள் தாங்களும் சந்தோஷமாக இருந்து குடும்பத்தையும் சந்தோஷமாக வைத்திருக்கின்றனர்.

அன்பு என்பது விலை மதிப்பற்ற ஒன்று. அது எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அன்பு பெறுபவர்கள் - மிகவும் அதிர்ஷ்டசாலிகள். நாள் முழுவதும் உழைத்துக் களைத்து வருபவர்களிடம் அன்பாக நாலு வார்த்தை பேசினால் அவர்களின் துன்பங்கள் பறந்து விடும்.

கணவன் - மனைவி என்ற புனிதமான உறவில் அன்பு, மரியாதை, நம்பிக்கை ஆகியவை பின்னிப் பிணைந்து உள்ளன. அதில் அகங்காரம் நுழையும் போது தான் உறவில் புனிதம் அடிபட்டு போகிறது.

'நமக்கு வேண்டியதை அடைந்துவிட வேண்டும். எதிராளியை பற்றிக் கவலை இல்லை' என்ற மனப்பாங்கு உள்ளவர்களால் அன்பு செலுத்த முடியாது. அவர்கள் சுயநலவாதிகள். உண்மையான அன்பில் நிபந்தனை இல்லாத அர்ப்பணிப்பு இருக்கும்.

கணவர் - மனைவி இடையே இருவரும் சமம் என்ற மனோபாவம் இருந்தால்தான் அங்கு ஈகோ போர் ஏற்படாமல் இருக்கும். உண்மையில் மனிதர்கள் வெவ்வேறு மனநிலை உள்ளவர்கள். திருமணம் என்ற பந்தம் இணைத்து வைக்கும் போது அவர்கள் தங்களின் முரண்பாடுகளை சமரசம் செய்து கொள்ள வேண்டி இருக்கிறது. இது முடியாத பட்சத்தில் அவர்களால் சேர்ந்து வாழ முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது. எனவே உங்கள் கணவர் ஆட்சேபகரமாக ஏதாவது சொன்னாலும் 'நீங்கள் சொன்னால் சரியாகத்தான் இருக்கும்' என்று சொல்லிப் பாருங்கள் பிறகு அவர் உங்களிடம் சரண்டர்தான்!

## சமைத்துச் சுவைப்போம்

### மங்கோ சர்ப்ரைஸ்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| மாம்பழம் | - ஒன்று |
| பால் | - 200 மி.லீ |
| புளிக்காத தயிர் | - அரை கப் |
| சீனி | - தேவைக்கு |
| எலுமிச்சைசாறு | - சில துளிகள் |

*செய்முறை:-* மாம்பழத்தைச் சிறுதுண்டுகளாக நறுக்குங்கள். பால், தயிர், சீனி ஆகியவைகளை ஒன்றாக்குங்கள். எலுமிச்சை பழச்சாற்றையும் அதில் கலந்திடுங்கள். அதன் மேல் மாம்பழத் துண்டுகளைப் போடுங்கள். நீளமான கப்களில் இதனை ஊற்றிக் குளிர வைத்துப் பருகுங்கள்.

# வசீகரிக்கும் கவர்ச்சிக் கூந்தலுக்கு...



'என் சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்' என்று சொல்லப்படுவது உண்மை. தோற்றத்தில் பொலிவையும் ஆளுமையையும் ஏற்படுத்துவதில் கேசத்திற்கு பிரத்தியேக இடமுண்டு சிலரின் 'பளபளா' கூந்தலைப் பார்க்கும் போது நம்மையும் அறியாமல் ஒரு ஏக்கம் பிறந்து விடுகிறது. சிலருக்குக் கருங் கூந்தல் நெளிவு, நெளிவாக அலைபாய்ந்து கொண்டிருக்கும் சிலருக்கு நீளவாக்கில் ஷாம்பு விளம்பரத்தில் வருகின்ற பெண்ணைப் போன்ற கவர்ச்சி கூந்தல் இயல்பாகவே அமைந்திருக்கும்

ஆனால், கூந்தலை பராமரிக்காமல் விட்டாலோ அவ்வளவு தான். நிறைய,நிறைய தண்ணீர் குடித்து, முறையான உடற் பயிற்சி செய்தாலே போதும் 'அட்ராக்டிவ்' கூந்தல் நமக்குத்தான் என்கிறார் சர்வதேச சிகையலங்கார நிபுணர் ஜாவித் ஹபீப்.


சுற்றுப்புறச் சூழல், மாசு, வெப்பம், குளோரின் கலந்த தண்ணீர், ஹேர் ஸ்டைலிங் கருவி, ஹேர் ஸ்டைலிங் பொருட்கள் ஆகியவை நம் முடியைப் பாழ்படுத்தி விடுகின்றன. இதனால், வைக்கோலாகவும், காய்ந்த சருகுகளாகவும் தலைமுடி மாறி விடுகிறது. இதனால், கூந்தலின் இயற்கையான அழகைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமை.

முதலில் தலைமுடியை மிக மிக சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் ஒருநாள் விட்டு ஒருநாள் ஷம்புவினால் தலைமுடியை நன்றாக அலச வேண்டும். தேவைப்பட்டால் மிதமான கண்டிஷனரால் அலச வேண்டும். கோடைகாலத்தில் பொடுகு, வியர்வை ஆகியவை தலைமுடியில் அதிகம் ஏற்படும். இதனால் மருதாணி பவுடரைத் தலைக்குத் தேய்த்துக் குளிக்க வேண்டும்.

குடையில்லாமல் வெயிலில் சென்றால் தலைமுடி அம்போ தான். ஜெல், ஸ்ப்ரே வேண்டாவே வேண்டாம். இவை சூட்டை விளைவித்து கேசத்தின் வேர்களை பாதிக்கும்.

இவையெல்லாம் சில டிப்ஸ்தான். கூடுதல் கவர்ச்சியாக, இளமையாக உங்களைக் காட்டுவதற்கு உங்கள் தலைமுடியைப் பாதுகாத்தால்தான் முடியும். அதற்கு நிறைய நிறைய தண்ணீர் குடித்து, மனதை அமைதியாக வைத்துக்கொள்ளுங்கள். அலைபாயும் கூந்தல் வேண்டுமெனில் மனதை அலைபாய விடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

## மருத்துவக் குறிப்புகள்



- வெந்தயத்தை வறுத்துத் தூளாக்கி கைவசம் வைத்துக் கொள்ளுங்கள். வயிற்று வலி, சூடு ஆகியவற்றால் பாதிக்கப்படும் போது பொடியைச் சிறிது வெந்நீரில் போட்டுக் குடித்து விட்டால் பிரச்சினைத் தீர்ந்தது.
- காலை எழுந்ததும் வெறும் வயிற்றில் ஒரு ஸ்பூன் தேன், ஒரு மூடி எலுமிச்சைச்சாறு ஆகியவற்றை ஒரு டம்ளர் சுடு நீரில் கலந்து தினமும் குடித்து வந்தால் நாளடைவில் உடல் பருமன் குறையும்.

# நீங்கள் சரியாக நடக்கிறீர்களா?



ஒரு பெண் எவ்வளவு அழகாக இருந்தாலும் அவள் சரியாக நடக்காமலும், சரியாக உட்காராமலும் இருந்தால் அவள் அழகு முழுமைபெறாது என்பது மட்டுமல்ல, ஆரோக்கியமும் நன்றாக இருக்காது. குனிந்தபடியே நடப்பதும், வளைந்து நெளிந்தபடியே உட்காருவதும் யாருக்குத்தான் அழகைத் தரும்?



பரிணாம வளர்ச்சியில் மனிதன் இரு கால்களில் நிமிர்ந்து நிற்கத் தொடங்கினான். அதற்குத்தக்கபடி அவனது அவயவங்களும் செயல்ப்படத் தொடங்கின. அதனால் மனிதன் தனது நடை, உட்காரும் முறை போன்றவைகளையும் உடல் அமைப்புக்குத்தக்கபடி மேற்கொள்ள வேண்டியதாகிவிட்டது. ஆனால் பலரும் சரியான முறையில் நடப்பதில்லை. சரியான முறையில் உட்காருவதும் இல்லை.

குனிந்த நிலையில் நடப்பவர்களுக்கு நெஞ்சுப்பகுதியும், சுவாசப்பகுதி அமைப்புக்களும் நெருக்கடிகளுக்கு உள்ளாகுகின்றன. குனிந்தபடியே நடக்கும்போது ஆழ்ந்து சுவாசித்தாலும் அவர்களுக்குத் தேவையான அளவு வாயு கிடைப்பதில்லை. உடலுக்குத் தேவையான அளவு காற்று கிடைக்காதபோது தளர்ச்சியும், உற்சாகக் குறைவும் ஏற்படும்.

குனிந்த நிலையில் நடப்பவர்களுக்கு முதுகெலும்பு வளைந்த நிலையில் இருக்கும். அதனால் அவர்களின் ஜீரணத்திலும் பிரச்சினைகள் ஏற்படும். சிலர் தலையை நேராக வைத்திருக்காமல் முன்நோக்கி இழுத்து இழுத்து நடப்பார்கள். அதனால் அவர்களின் கழுத்தின் இருபகுதி தசையிலும் முதுகெலும்பின் தசைப்பகுதியிலும் அழுத்தம் ஏற்படும். அப்போது உடல்வலியும் முதுகெலும்பு வலியும் ஏற்படும்.

நடை நான்கு கட்டங்களின் இணைப்பாக இருக்கவேண்டும். முதலில் குதிக்காலை நன்றாகத் தரையில் ஊன்றவேண்டும். இரண்டாவதாக கால் முழுவதையும் அழுத்தமாக ஊன்ற வேண்டும். மூன்றாவதாக விரல்களை நிலத்தில் ஊன்றி, குதிக்காலை உயர்த்த வேண்டும் நான்காவதாக காலைத் தூக்கி உயர்த்த வேண்டும். இது ஒரு காலின் நிலைதான். இதேபோல் அடுத்த காலின் இயக்கமும் இருக்கவேண்டும். இருகால்களும் இப்படி இயங்கும் நேரத்தில் கைகளும் அசைக்கப்பட வேண்டும். இதுதான் சரியான நடை.

நடக்கும்போது கால் பாதங்கள் இரண்டும் நேராக இருக்க வேண்டும். சரிந்த நிலையிலோ, வளைந்த நிலையிலோ கால்களைத் தூக்கி வைக்கக்கூடாது. நடக்கும்போது உடலின் எல்லாப் பகுதிகளும் ஒரே மாதிரி நேர்க்கோட்டில் இருக்க வேண்டும்.

பெண்கள் கால் பாதங்களை தூக்கிவைத்து நடக்கவேண்டும். செருப்பு தரையில் உரசும் சத்தமோ நடக்கும் சத்தமோ கேட்கக்கூடாது.

சில பெண்கள் நடையை பேஷன் என்று கருதி கால் விரல்களை மட்டும் ஊன்றிக்கொண்டு நடப்பார்கள். அது முறைப்படியான நடை இல்லை. அந்த மாதிரி நடப்பது உடல் ஆரோக்கியத்திற்கும் நெருக்கடியை ஏற்படுத்தும்.

வீடுகளிலோ அலுவலகத்திலோ இருக்கும் போதும் நன்றாக நிமிர்ந்து உட்கார வேண்டும். சிறிது நேரம் நிமிர்ந்து இருந்தால் சிரமமாக இருப்பவர்கள் எழுந்து நடந்து விட்டு மீண்டும் உட்கார்ந்து கொள்ள வேண்டும். முதுகெலும்பு இருக்கையோடு சேர்ந்து இருக்க வேண்டும். பாதங்களையும் காலோடு சேர்த்து நிலத்தில் சமமாக வைக்க வேண்டும்.

**வசந்த வாழ்வைத் தேடி அலைவதைவிட வாழும் வாழ்வை வசந்தமாக்கிக் கொள்வதுதான் அறிவுடைமை**

○ ○ ○

**இவ்வுலகில் பிறர் வாழ்வைப் பாழ்படுத்துபவர்கள் மறுவுலகில் தம் வாழ்வையே பாழ்படுத்திக்கொள்வார்கள்.**

# சுவாமி விவேகானந்தர்

## கருணையின் சரிதம்

சாட்சாத் சர்வேசுவரியே உயிரும் உடலும் கொண்டு அவர் முன் நின்றாள். மந்த ஹாஸம் புரிந்தாள்; கருணை துளும்பத் துளும்ப நோக்கினாள்; அமிருத மயமாகப் பேசினாள். அவள் கழுத்தில் ஒரு



ஹாரத்தை கதாதரர் சரி செய்தாரானால் அவரது புறங்கையிலுள்ள உரோமங்கள் மெல்ல ஆடும்; ஆம் அந்த புறங்கைக்கு அருகேயுள்ள தேவியின் திருநாசியின் சுவாஸக் காற்றில் தான் அவை ஆடும். அவள் பாதத்தில் அவர் நீண்ட நேரம் சிரம் பதித்து வணங்கியிருந்தால் கிண்கிணி நாதம் அவர் செவிகளில் தேன் சொட்டுகளாக விழும். அம்பிகை தன் சரண கமலங்களை நன்கு பொருத்திக்கொள்ளும் போது அவற்றில் தரித்த நூபுரங்கள் அசைய அவற்றின் முத்துப் பரல்கள் எழுப்பும் இன்னொலி தான் அது.

ராஸமணியின் சமஸ்தானத்தை பரிபாலித்துவந்த மதுரநாத விசுவாசர் சுதாகரரைப் பல விதத்தில் பரீட்சித்துப் பார்த்து காமம் கற்றிய தூயர் அவர் என்று கண்டார். பெண்களெல்லாமே தேவியாகக் கண்ட கதாதரரிடம் காமம் எப்படித் தலைகாட்ட முடியும்?

இப்படிப்பட்டவருக்குத்தான் திருமணம் முடிக்க வேண்டும் என்று தாயார் சந்திரமணி விரும்பினாள் கதாதரர் தம் அன்னையின் விருப்பத்தை உலக அன்னையிடம் தெரிவித்தார். அவளும் அதற்கு இணங்கவேண்டுமென ஆக்ஞாபித்தாள்.

காமார்ப்புகுரிலிருந்து மூன்றே மைலிலுள்ள ஜயராம் பாடியில் ஐந்து வயதுக்குழந்தையாக விளையாடிக் கொண்டிருந்தாள் சாரதாமணி. பிஞ்சுப் பருவமானாலும் அப்போதே அவளுக்குத் தூய்மையில் தனியார்வம் இருந்தது. மலர்களைக் காணும் தோறும் அந்தக் குழந்தைக்கு அம்மலர்களின் பரிசுத்தம் தனக்குக் கிட்ட வேண்டும் என்று ஆண்டவனைப் பிரார்த்திக்கத் தோன்றும். வட்ட மதியத்தைக் காணும்தோறும் அந்த மதியத்திலுள்ள மாசும் கூட இன்றித் தான் தூய ஒளி வீச வேண்டும் என்று பகவனைப் பிரார்த்திப்பாள் சாரதை.

குழந்தை சாரதாமணிக்கும் இருபத்தி நாலு பிராயத்து கதாதரருக்கும் 1859ஆம் ஆண்டு மே மாதம் விவாஹம் நடந்தேறியது.

மீண்டும் தட்சிணேசுவரத்துக்கு அர்ச்சகராகத் திரும்பினார் கதாதரர். அன்னை, மனைவி, இதர உறவினர் ஆகியோரை அடியோடு மறந்தார். சத்தியப் பொருளைத் தவிர வேறெதும் அவரது உள்ளத்தை ஈர்க்கவே இல்லை.

இந்தச் சமயத்தில் தந்திரசாதனையில் தேர்ச்சிபெற்ற பைரவி பிராம்மணி என்ற சன்னியாசினி தட்சிணேசுவரத்துக்கு வந்தாள். ஜீவனின் உடலத்தில் மூலாதாரத்தில் உள்ளகுண்டலினியாம் பிராண சக்தியை, எழுப்பி ஸ்வாதிஷ்டானம், மணி பூரகம், அநாஹதம் விசுத்தி, ஆக்ஞை முதலிய சக்கரங்களைக் கடக்கச் செய்து சிரஸில் ஸஹஸ்ராரத்திலுள்ள சிவத்தில் அதனை ஒன்றச் செய்து முக்தி நிலை பெறச் செய்வது தந்திர சாதனை.

தந்திர சாஸ்திரத்தில் தேர்ந்த பயிற்சி பெற்றவளும் ஒப்பற்ற தூய்மை நிறைந்தவளும் உண்மையான பக்திகரை புரளுபவளுமான பைரவி பிராம்மணி கதாதரரை அவதார புருஷர் என அறிந்தாள். குழந்தைத்தனம் சற்றும் மாறாத அந்த எளிமை நிறைந்த கதாதரருக்குத் தாய் போலவே தான் இருந்து அவருக்கு தந்திர மார்க்கத்தை உபதேசித்த குருவானாள். நம்ப இயலாது மிகக் குறுகிய காலத்திலேயே கதாதரர் தந்திர சாதனைமூலம் ஜீவபிரம்ம அபே

## அத்தியாயம் - 11

தத்தை உணர்ந்தார்.

வேதாந்த சத்தியத்தை உள்ளவாறு அனுபவித்த தோதாபுரி என்ற சன்னியாசி தட்சிணேசுவரத்துக்கு வந்து சேர்ந்தார். அவர் தாம் கதாதரருக்கு வேதாந்தத்தைப் போதித்தவர். பரம்பொருளோடு ஒன்றிவிடும் நிர்விகல்ப சமாதி நிலைக்கு எத்தனையோ காலப்பயிற்சி வேண்டும். நாற்பதாண்டுகள் கடும் நியமமும் அனுஷ்டானமுமாக வாழ்ந்து இந்த அத்வைத நிலையை அனுபவித்தவர் தோதாபுரி. அவர் காட்டிய வழியைப் பின்பற்றிய கதாதரரோ ஒரே நாளில் நிர்விகல்ப சமாதிநிலையை அடைந்தார். இந்த உலகத் தோற்றத்துக்குக் காரணமான, ஒன்றேயானமெய்ப் பொருள் தாமே என்பதை அறிந்து, அனுபவித்துவிட்டார் கதாதரர்.

கதாதரருக்கு முறைப்படி சன்னியாசம் அளித்தார் தோதாபுரி ஆதிசங்கரர் வகுத்த ·பத்துவிதமான சன்னியாசிகளில் 'புரி' என்பவர்களும் அடங்குவர். அத்வைதத்தை உள்ளங்கை நெல் லிக்கனியாக அனுபவித்த ஸ்ரீ ராமகிருஷ்ணர் அத்வைதத்தை தனிப்பெரும் சமயமாக ஸ்தா பித்த ஆதிசங்கரின் வழியிலேயே வந்தது மிகமிகப் பொருத்தமல்லவா?

ஸ்ரீராமகிருஷ்ணர் யார் என்று யோசிக்க வேண்டாம்! கதாதரரேதாம் பகவான் ஸ்ரீராம கிருஷ்ணராகி விட்டார்.

* * *

ஸ்ரீராமகிருஷ்ணருடைய வைத்தியத்தைப்பற்றி அவர் பிறந்த கிராமத்தில் பல கதைகள் உலவலாயின. அதைப்பற்றிய உண்மையை நேரில் கண்டு அறிய வேண்டும் என சாரதாமணியே தட்சிணேசுவரத்துக்கு வந்தாள். அப்போது அவளுக்கு வயது பதினெட்டு. ஆனால் பதினெட்டு பிராயத்துப்பெண்ணொருத்தியைஸ்ரீராம கிருஷ்ணர் காணவில்லை. காலம் கடந்த காளி மாதாவையேதான் சாரதாமணியிடம்கண்டார். பெண்ணே சர்வேசுவரி எல்லா மாதர்களிடத்திலும் தானே உறைவதாக எனக்குக் காட்டி அருளியிருக்கிறாள். உன்னையும் என் அன்னையாகத்தான் நான் காண இயலும் என்றாலும்நான்உன்னை கலியாணம் செய்து கொண்டுவிட்டதால்என்னை நீ உலக வாழ்வுக்குத் திருப்ப உரிமைகோர முடியும். அப்படி நீ உரிமை கோரினால் நான் உன் ஊழியனாக இருக்கிறேன் என்றார் ஸ்ரீராமகிருஷ்ணர் சாரதையிடம்.

ஸ்ரீராமகிருஷ்ணர்தான் அப்படிப்பேச முடியும்! அப்போது சாரதாமணிதான் அப்படி பேச முடியும் என்று சொல்லும் வகையிலே அவள் விடையளித்தாள். 'சுவாமி, உங்களை நான் உலக வாழ்வுக்கு திருப்ப மாட்டேன் அந்த எண்ணம் எனக்கில்லை. உங்கள் அருகில் இருக்க வேண்டும்; உங்களுக்குப் பணிவிடை புரிய வேண்டும். உங்களிடமிருந்து போதனை பெறவேண்டு மென்பதற்காகத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்' என்று கூறினாள் அவள்.

மலரின் தூய்மையும்த மாசற்ற மதியத்தின் பரிசுத்தமும் தனக்குக் கிடைக்க வேண்டும் என்று அவளது ஐந்தாவது வயதில் பிஞ்சிவிட்ட ஆசை பழுத்தே விட்டது. பழுக்காமல் வேறு எப்படி இருக்க முடியும்?

ஸ்ரீராமகிருஷ்ணரின் 'பைத்தியத்தைப்புரிந்து கொண்ட சாரதை மனைவிஸ்தானத்திலிருந்து விலகி மாணவி ஆனாள். சதி-பதி உறவு குரு-சிஷ்ய உருவான இந்த மகத்தான தெய்வங்களின் கதையை நினைக்கும் போதெல்லாம் நம் அழுக் கடைந்த உள்ளங்களைக் கழுவிக் கொண்டாற் போன்ற ஒரு புத்தம் புதுப்புனிதம் நிறைகிறது.

* * *

குரு-சிஷ்ய பாவத்துடன் மட்டும் இந்தத் தொடர்பை முடிக்கவில்லை பரமஹம்சர்! குருவே பக்தனாகி சிஷ்யையத் தேவியாகத் தொழுது பார்க்க விரும்பினார் அவர். ஓர் அமாவாஸ்சை இரவில் அற்புதமான ஷோடசி ஆராதனையும் சாரதாமணிக்கு நிகழ்த்தி விட்டார்.

விக்கிரகத்தில் தேவியை ஆவாஹனம் செய்வது போலவே சாரதாமணியின் உடலில் தேவியை ஆவாஹனம் செய்து அவளை சாரதாதேவியாகவும் அவள் விரும்பியபடியே தூய அன்னையாகவும் செய்துவிட்டார். பரம்ஹம் சர். பூஜிக்கப்பட்ட தூய அன்னை பூஜிக்கும் பரமஹம்சர் இருவருமே பரவச நிலை அடைந்தனர். இருவருமே பரம்பொருளில் லயித்திருந்தனர். லயமும் தன்னால் கலைந்தது. தாம் வாழ் நாள் முழுவதும் புரிந்திருந்த சாதனைகளின் பலனையெல்லாம் தூய அன்னையின் பாதங்களில் அர்ப்பணித்தார் ஸ்ரீராமகிருஷ்ணர். அதற்கடையாளமாகத் தமது ஜபமாலையையும் அவளது சரணத்தில் சமர்ப்பித்தார். ஸ்ரீராமகிருஷ்ணரின் கடுமையான ஆன்மிகப் பயிற்சிகளும் ஷோடசி பூஜையுடன் முடிவடைந்தன. முடிவடைந்தன என்

**ஆன்மீகப் பாதை**

**ரா.கணபதி**

பதைவிட நிறைவடைந்தன என்று சொல்வதே பொருத்தமாகும்.

* * *

வேதாந்த மார்க்கத்தாலும், பக்தி மார்க்கத்தாலும்த ஆணாக இருந்தும், பெண்ணாக இருந்தும் ஆண்டவனைக்கண்ட ஸ்ரீ ராமகிருஷ்ண முனிவர் இதர மதங்களாலும்இறைவனைஅடைய முடியும் என்பதையும் விளக்கலானார். தாமே இஸ்லாமிய மதக் கோட்பாடுகளைப்பின்பற்றி அதன் மூல மும் மூலப்பொருளை உணர்ந்தார். இயேசுநாதரைக் காணப் பெற்று, கிறிஸ்துவ மதமும் மெய்யிடமே மக்களை இட்டுச் செல்கிறது என்பதை மெய்ப்பித்தார்.

ஒரே இடத்துக்கு பலபாதைகளின் மூலம் செல்வது போல ஒன்றேயான கடவுளைப் பல மதங்களாலும் அடைய முடியும் என்பதை எழுத்துக்கு எழுத்து நிருபித்த அவதார வரிஷ்டரானர் ஸ்ரீராம கிருஷ் ணர்.

(தொடரும்)

# வடக்கு - கிழக்கிலிருந்து இடம்பெயரும் மக்களுக்கு ஐரோப்பிய யூனியன் உதவி!

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் தற்போது இடம்பெற்றுவரும் மோதல்களினால் இடம்பெயர்ந்துவரும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் பொருட்டு ஐரோப்பிய யூனியன் 7 மில்லியன் யூரோக்களை உடனடி தேவைக்கு ஒதுக்கியுள்ளதாகஐரோப்பியயூனியனின் இலங்கை மற்றும் மாலை தீவுகளுக்கான வதிவிடப் பிரதிநிதி யூலியன் வில்சன் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதாபிமான பணிகளை மேற்கொள்ளும் அமைப்பான எக்கோ மூலம் ஒதுக்கப்பட்டு இந்நிதி பல உடனடி நிவாரணத் திட்டங்களுக்கு இடம்பெயர்ந்த மக்களுக்காக பயன்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற மாநாட்டில்'எக்கோ' அமைப்பின் இலங்கைக்கான தலைமை அதிகாரி டேவிட் வேபூம் மற்றும் யூலியன் வில்சன்ஆகியோர்கலந்துகொண்டு இதுகுறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தனர்.

வடக்கு-கிழக்கில் சுமார் 20 வருடகாலமாக இடம்பெற்று வரும் மோதல்கள் காரணமாக சுமார் 80இலட்சம் மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

மேலும் தற்போது 2005 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற மோதல்களினாலும் பிணக்குகளினாலும் மேலும் சுமார் 3 இலட்சத்து 50ஆயிரம் மக்கள் வடகிழக்கில் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாமல் அவதிப் படுகின்றனர். அவர்களுக்கு இந்த நிதியின் மூலம் தேவையான உடனடி நிவாரணங்களை அளிக்க ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளதாக இவர்கள் குறிப்பிட்டனர்.

மேலும் இந்த நிதி ஒதுக்கீடு இடம்பெயரும் மக்களுக்கு மீள் குடியேற்றம், அடிப்படை சுகாதார வசதிகள், நீர் மற்றும் உணவு உட்பட்ட அத்தியாசிய தேவைகளை முன்னிலைப்படுத்தி பயன்படுத்தப்படும் என குறிப்பிட்ட அவர்கள் சுனாமியின் பின்பு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு 100மில்லியன் யூரோவைநன்கொடையாக வழங்க முன் வந்தது அத் தொகையில் 45 மில்லியன் கடந்த வருடம் அரசிற்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வருடம் மிகுதி 55 மில்லியன் யூரோ இலங்கை அரசுக்கு வழங்கப்படும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (கு)

# நயினை பக்தர்களின் வேண்டுகோள்

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு செல்லும் பக்தர்கள் படையினரின் கெடுபிடியின்றி பாதுகாப்பாக சென்றுவர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பக்தர்கள் தரப்பில் கேட்கப்பட்டுள்ளது.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களை படையினர் சிலர் தீவிர விசாரணைக்குட்படுத்துவதுடன் உடற்பரிசோதனையும் செய்கின்றனர். படையினரின் இச்சோதனை நடவடிக்கையால் பக்தர்கள் உரிய நேரத்திற்கு ஆலயத்திற்கு சென்று விசேடபூசைகளை பார்க்கமுடியாது திரும்புவதாக கூறப்படுகின்றது.

இதேவேளை கடந்த வருடத்தை விட இந்த வருடம் மிக குறைவான அளவு பக்தர்களே ஆலயத்திற்கு வருகை தருகின்றனர் என ஆலய வட்டாரங்கள்தெரிவிக்கின்றன. (கு)

# இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

(துன்னாலை)

தரம் ஐந்து மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுமுகமாக இலவச வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றினை கரவெட்டி மகேஷன் விளையாட்டுக்கழகத்தினர் நடத்தவுள்ளனர்.

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட கருத்தரங்கானது நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் கழகத்தின் ஆலோசகர் கணேசமூர்த்திதலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதி சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12மணிவரை வழிகாட்டல் வகுப்புக்கள் நடை பெறவுள்ளதாகவும் பங்குபற்றும் மாணவர்கட்கு இலவச அச்சடித்த பாடக் குறிப்புக்களும், கோவைகளும் வழங் கப்படவுள்ளதாக கழகத்தின் செயலாளர் வே.ராஜதீபன் தெரிவித் துள்ளார். (கு-101)

# அரசாங்கத்துக்கு எதிராக ஜே.வி.பி.போர்ப்பிரகடனம்

அரசாங்கத்துக்கு எதிராக ஜே.வி.பியின் தொழிற்சங்கப் பிரிவு போர்ப் பிரகடனம் வெளியிட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசிய ஜே.வி.பி தொழிற்சங்கப் பிரிவு தலைவர் லால்காந்த அரசாங்க ஊழியர்களுக்கு மஹிந்த அரசாங்கம் துரோகம் செய்துவிட்டது. தேர்தலின் போது அளித்த வாக்குறுதிகளை மஹிந்த அரசு நிறைவேற்ற வில்லை என்று குற்றம் சாட்டினார்.


அரசாங்க பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால்பாரிய வேலைநிறுத்தத்தை மீண்டும் முன்னெடுக்க நேரிடும் என்றும் அவர் எச்சரித்தார்.

மஹிந்த அரசாங்கத்திடம் புதிதாக எந்தக் கோரிக்கையையும் அரசாங்க பணியாளர்கள் முன் வைக்கவில்லை. பல ஆண்டுகளாக தாங்கள் முகம் கொடுத்து வரும் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்றே வலியுறுத்துகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (கு)

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 19

முருக-தனுஷ்கோடி



ரெயில் நிலையத்துக்கு வெளியே நின்ற காரில் ஏறி அமர்கிறார். மக்கள் கரகோஷம் செய்கிறார்கள். ஊர்வலம் புறப்படுகிறது. ஊர்வலம் நெல்லையப்பர் பெருஞ்சாலையில் திரும்பிப் பாளையங்கோட்டை நோக்கிப் போகிறது.

தாமிரபரணிப் பாலத்தைக் கடந்தாயிற்று காமராஜின் காரைச் சுற்றிப் பெரிய மனிதர்கள். அந்தப் பெரிய மனிதர்களை மெல்ல மெல்ல விலக்கிக்கொண்டு ஓர் இளைஞன் தொண் டன் காமராஜை நெருங்குகிறான்.

இதை அவர் ஒரு நொடியில் புரிந்துகொள்ளுகிறார். என்ன சங்கதி? என்று அவனிடம் கேட்கிறார். அவருடைய காதருகில் நெருங்கி ஏதோ முணு முணுக்கிறான். அவர் எதையோ அறிந்து கொள்ளுகிறார். ஊர்வலம் வண்ணாரப்பேட்டையை நெருங்குகிறது.

திடீரென்று காமராஜ் தனக்கு அருகில் வந்து கொண்டிருந்த பெரிய மனிதரிடம் என்னை எங்கே அழைத்துச் செல்லுகிறீர்கள் என்று கேட்கிறார். அவர் பதிலளிக்கிறார். புகழ்பெற்றவக்கீல் ஒருவரின் பெயரைச் சொல்கிறார்!.. நாடார் வீட்டுக்கு என்கிறார்! காமராஜ் நெருப்பை மிதித்தவர் போல் துடிக்கிறார்.

வண்டியைத் திருப்புங்கள் பயணிகள் விடுதிக்குப் போங்கள் எங்காவது ஓட்டலுக்கு அல்லது சத்திரம் சாவடிக்குச் செல்லுங்கள் அந்தத் துரோகியின் வீட்டுக்கு நான் வரவே மாட்டேன் என்று கத்துகிறார்.

பெரிய மனிதர் ஏதேதோ சமாதானம் கூற முயல்கிறார் .ஆனால் காமராஜ் அதற்குள் வண்டியின் கதவைத்திறந்து கொண்டு கீழே குதிக்க முயல்கிறார் .பெரிய மனிதர் அரண்டு போனார் .இதற்குள் டிரைவர் காரை நிறுத்திவிட்டார். நகர்ந்து கொண்டிருந்த ஊர்வலம் நின்றது! என்ன என்ன என்ற பரபரப்பு எங்கும் ஏற்பட்டது. காமராஜ் அந்தக் குறிப்பிட்ட புகழ் பெற்ற வக்கீல் நாடார் வீட்டுக்குப் போக மறுக்கிறார் ; ஏனென்றால் அவர் ஒரு தேசத் துரோகியாம் என்ற செய்தி எங்கும் பரவியது.

மக்களிடையே பெருத்த ஆரவாரம் கிளம்பியது அது ஒரு மகிழ்ச்சி ஆரவாரம் தலைவர் காமராஜுக்கு ஜே.என்ற அன்பு முழக்கம் விண்ணை அதிர வைத்தது.

நெல்லை மக்கள் ஏற்கெனவே அந்த வக்கீல் நாடாரைப் பற்றி அறிவார்கள் அவரை அவர்கள் இகழ்ந்தார்கள் சிறையில் இருந்து வெளிவரும் தேசபக்தத் தலைவரை அவர் வீட்டில் தங்குவதற்கு ஏற்பாடு செய்வது ஏற்கெனவே அந்த வக்கீல் நாடாரின் துரோகச் செயலால் சிறையில் வாடும் தேசத் தொண்டர்களுக்கு இழைக்கின்ற அவமானம் என்று மக்கள் கருதினார்கள்.

இந்த நிலையில் தலைவர் காமராஜ் காட்டிய உறுதியும் நேர்மையும், நாணயமும், சுடர்விடும் தேசபக்தியும், சிறையில் வாடும் தேசத் தொண்டர்களுக்கு அவர் அளித்த அன்பும் மரியாதையும் மக்கள் உள்ளத்தை உருக்கியது. அவர்கள் மீண்டும் மீண்டும் எங்கள் காமராஜுக்கு ஜே.என்று முழங்கினார்கள்.

அதன்பிறகு அந்த ஊர்வலத்தில் இருந்த மக்கள் யாருடைய ஆணையையும் எதிர்பார்க்கவில்லை. கொட்டு முழங்க நாதசுரம் இழைய திருச்செந்தூர் சாலையில் இருந்து நாங்குனேரி சாலைக்கு மாறி வீர நடைபோட்டனர். முன்னைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு ஆரவாரத்துடன் பயணிகள் விடுதியை நோக்கி நடக்கலாயினர்.

கார் தானே திரும்பியது காரில் இருந்த தலைவர் காமராஜ் முகத்தில் அப்போது தனிக்களை மிளிர்ந்தது.

தேசத் துரோகி என்று மக்களும் காமராஜும் கணித்த அந்த வக்கீல் நாடார் யார் என்றால் அவர் ஒரு பொலிஸ்தரப்பு வக்கீலாக இருந்தவர் .1937ல் காங்கிரஸ்காரராக இருந்தும் 1942ல் பொலிஸ் கைக்கூலியாக இருக்க இணங்கியவர். குலசேகரப் பட்டினம் வழக்கில் பொலிஸ்தரப்பு வக்கீலாக இருந்தது அவர்தான். இரண்டு நாடார்களைத் தூக்குமேடைக்கும் சுமார் முப்பது பேர்களை ஆயுட்கால சிறைவாசத்துக்கும் அனுப்பியவர் அந்த வக்கீல் நாடார்தான்.

அவர் செய்தது இது மாத்திரம் அல்ல.

குலசேகரப்பட்டினம் வழக்கு விசாரணை நெல்லையில் தனி நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருந்த போது பொதுமக்கள் பணம் திரட்டி நாள்தோறும் காப்பியும் பழமும் வாங்கிக் கைதிகளுக்குக் கொடுப்பது பழக்கம்.

இவ்வாறு காப்பி கொடுப்பதைத்தடுத்தவர் இந்த வக்கீல் நாடார்தான்.

இத்தகைய வக்கீல் வீட்டில் தண்ணீரும் அருந்த அன்று காமராஜ் மறுத்தார். அந்த வக்கீல் நாடார் தூக்குக் கொட்டறைக்கு இரண்டு பேர்களை அனுப்பினார் அல்லவா? அவர்கள்தான் தூக்கு மேடை ராஜகோபாலன் காசிராஜன்!.

இந்த அனுபவத்தை தலைவர் காமராஜ் எப்படித் தொண்டர்களை மதித்தார் என்பதை தூக்கு மேடை ராஜகோபாலனே என்னிடம் கூறியுள்ளாார்.

தலைவருக்குத் தொண்டராய்....!

காமராஜ் எப்படித்தொண்டர்களுக்கு நல்ல தலைவராய் விளங்கினாரோ அதேபோலத் தன் தலைவருக்கு நல் தொண்டராகவும் விளங்கினார்.

1929 ஆம் ஆண்டிலேயே காங்கிரசில் இருந்து வி[illegible]யவர் சீனிவாச ஐயங்கார் .அவர் மீண்டும் காங்கிரசில் சேர விரும்பினார். இதற்குச் சிலர் முயற்சி எடுத்துக்கொண்டனர். இந்த முயற்சியில் ஈடுபட்டவர்கள் அபேதவாதிகள் என்று அழைக்கப்பட்டனர். காங்கிரசினுள் இருந்த கோஷ்டி இது இந்த அபேதவாதிகள் கோஷ்டி சீனிவாச ஐயங்காரிடம் சென்றது! தாங்கள் அவரை ஆதரிப்பதாகவும் காமராஜ் கோஷ்டியும் அவரை ஆதரிக்க முன்வந்திருப்பதாகவும் அவர்கள் ஐயங்காரிடம் கூறினர். இரண்டு கோஷ்டியும் ஆதரிப்பதால் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில் ஐயங்கார் வெற்றி பெற்றுவிடலாம் என்றும் கூறினார்கள்.

உடனே ஐயங்கார் காமராஜரிடம் இது குறித்துப் பேசினார். தாம் சொல்கிறபடி காமராஜ் கேட்கக்கூடும் என அவர் எண்ணினார்.

நீங்கள் சொல்லுவது சரிதான் நாங்களும் அபேதவாதிகளும் உங்களுக்கு ஓட்டு அளித்தால் நீங்கள் வெற்றி பெற்றுத் தலைவராக வரமுடியும் என்பது என்னவோ உண்மைதான். ஆனால் காங்கிரசுக்குள் வந்து நீங்கள் செய்யப்போவது என்ன? என்று காமராஜ் ஐயங்காரிடம் கேட்டார்.

காங்கிரசுக்குள் வந்து காந்தியை நான் எதிர்ப்பேன் என்று ஐயங்கார் கூறினார். அவ்வளவுதான்! காமராஜ் துடிதுடித்துப் போய் விட்டார். காந்திஜியை எதிர்ப்பதும் ,எதிர்த்து வெற்றி பெறுவது என்பதும் நடக்காது அது எனக்குக் கடுக ளவும் பிடிக்காத ஒன்று காந்திஜியை எதிர்ப்பதற்கு நான் ஒப்புக் கொள்ளவே மார்ட்டேன் உங்களுக்கு இன்று நான் வெற்றியைத் தேடித்தந்துவிடலாம் ஆனால் அத்தோடு என் வாழ்க்கையும் அஸ்தமித் து விடும் என்றார் காமராஜ். (தொடரும்)

# செய்தித் துளிகள்

## பற்சிகிச்சைப் பிரிவு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் (MDM) போர்த்துக்கல் நிறுவனத்தினரால் புனரமைக்கப்பட்ட பற்சிகிச்சைப் பிரிவு நிலையம் கடந்த முதலாம் திகதி காலை 9.30மணிக்கு மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் எ.கேதீஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது. வைத்திய அதிகாரி சி .கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்தியர்கள், தாதிமார்கள், (MDM) போர்த்துக்கல் நிறுவன அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (சு-104)

## கருத்தரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்து அற நெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி கருத்தரங்கு மாவட்ட இணைப்பாளர் க.நாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (சு-133)

## நிதி ஒதுக்கீடு

(கற்கோவளம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையில் கடந்த வாரம் நடைபெற்ற செஞ்சிலுவைச் சங்க பிரிவுகளுக்கான நிதி ஒதுக்கீடு சம்பந்தமான கூட்டத்தில் பருத்தித்துறைப் பிரிவு உட்பட நான்கு பிரிவுகளின் வளர்ச்சிக்கென அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கம் 85 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறைப் பிரிவின் தலைவர் சூ.தவராசா தெரிவித்தார். (சு-104)

## ஆய்வுகூட நடமாடும் சேவை

(ஊர்காவற்றுறை)

யாழ். சுகாதாரப்பிரிவினரால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் ஆய்வு கூட நடமாடும் சேவை நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த நடமாடும் சேவையில் இரத்தப்பரிசோதனை சிறு நீர்ப் பரிசோதனை ஆகியவை மேற்கொள்ளப்படும். (கு-72)

## கணனிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரி இராஜ பரமேஸ்வரி தகவல் தொழில்நுட்ப நிலையத்தால் கடந்த மாதம் 25ஆம் திகதியில் ஒழுங்கு செய்யப்பட்ட கணனிக் கருத்தரங்கு நாளை (சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் இக்கருத்தரங்கில் பங்குபற்றிபயன்பெறலாம்.(கு)

## மீன்பிடி வள்ளங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் யுத்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடி வள்ளங்கள் வழங்கப்படவுள்ளன.

மீன்பிடி வள்ளங்கள் ஒவ்வொன்றும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியானவை எனவும் தற்போது இதற் கான பயனாளிகள் தெரிவு நடைபெறு கின்றது எனவும் அகதிகள் புனர் வாழ்வு நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கு)

## ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் மாதாந்தம் வெளியிடப்படும் "ஞானச்சுடர்" மலரின் ஆனி மாத இதழ் அண்மையில் வெளி வந்துள்ளது. (சு-9)

## சமுர்த்தி பணமுத்திரைக்கான கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத் திற்குட்பட்ட மக்களிற்கான சமுர்த் திப் பண முத்திரைக்கான கொடுப்பனவு கல்வியங்காடு, கோண்டா வில், திருநெல்வேலி சமுர்த்தி வங்கிகளில் 4-07.2006 தொடக்கம் 14. 07. 2006 வரை வழங்கப்படுகிறது.

சமுர்த்தி பணக் கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கு குடும்ப அட்டை ,சமுர்த்தி வங்கிக்கணக்கு புத்தகம் , ஆள் அடையாள அட்டை, சமுர்த்தி முத்திரை முதலியவற்றை சமர்ப்பிக்கவேண்டும். அத்துடன் வங்கிகளில் குறிப்பிட்டு ஒதுக்கப்பட்ட தினங்களில் கிராம சேவையாளர்பிரிவு ரீதியாக கொடுப் பனவைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*வலயம்-I கல்வியங்காடு*
11. 07.2006 ஜே/106,ஜே/107
12.07.2006 ஜே/108,ஜே/111
13.07.2006 ஜே/112
14.07.2006 ஜே/109

*வலயம்-II கோண்டாவில்*
07. 07.2006 ஜே/118,ஜே/128
11. 07.2006 ஜே/123,ஜே/124
12. 07.2006 ஜே/121,ஜே/122
13.07.2006 ஜே/120,ஜே/127
14.07.2006 ஜே/99

*வலயம்-III திருநெல்வேலி*
07. 07.2006 ஜே/102,ஜே/105
11. 07.2006 ஜே/104,ஜே/98
12. 07.2006 ஜே/103,
13. 07.2006 ஜே/114,

என்றவாறு கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக ஒதுக்கப்பட்ட தினங்களில் சமுர்த்தி பண முத்தி ரைக்கான பணக்கொடுப்பனவை பெற்றுக்கொள்ளலாம் என நல்லூர் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவி னர் அறிவித்துள்ளனர். (து-36)

## நவோதய வாரம்

யாழ்.மாவட்டத்தில் உள்ள நவோதய பாடசாலைகள் அனைத்தையும் நவோதய வாரத்தை அனுஷ்டிக்குமாறு மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரையாக ஐந்து நாட்கள் இவ்வாரத்தை அனுஷ்டிக்குமாறும் 15ஆம் திகதியும் 16ஆம் திகதியும் பாடசாலையில் சிரமதானப் பணியினை மேற்கொள்ளுமாறும் இதற்குரிய ஊக்குவிப்புக் கொடுப்பனவினை மாகாணக் கல்வித் திணைக்களம் வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். வலயத்தில் கனகரத்தினம் மகாவித்தியாலயம், புத்தூர் சோமஸ்கந்தா ஆகிய இரு பாடசாலையிலும் நவோதய வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே. தி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (து-133)

## கட்டாக்காலிகளால் அசுத்தமாகும் சந்தை

கரவவெட்டி கோவிற்சந்தை, இரவில் வரும் கட்டாக்காலி மாடுகளால் அசுத்தமடைவதாக வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையால்நிர்வகிக்கப்படும்மேற்படி சந்தையின் சுற்று வேலிகள் சேதப்படுத்தப்பட்டமையே இக் கட்டாக்காலிகள் உட்பிரவேசிக்க காரணம் எனவும் வியாபாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

விஷமிகளால் சேதமாக்கப்பட்ட மேற்படி வேலிகளை சீர்செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள்நடவடிக்கை எடுக்கவேண்டுமென வியாபாரிகள் தரப்பால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (சு-101)

## அருள் ஒளி வெளிவந்துள்ளது

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தினால் வெளியிடப்படும் அருள் ஒளி இதழின் வைகாசி மாத இதழ் அண்மையில் வெளி வந்துள்ளது. (சு-9)

# வங்கதேசத்தில் வேலை நிறுத்தம்; இயல்பு வாழ்க்கை பாதிப்பு

வங்கதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சிக் கூட்டணி நடத்திய தேசிய பொது வேலை நிறுத்தம் காரணமாக இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டது.

வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து டாக்காவில் முக்கிய வீதிகளில் ஆங்காங்கே எதிர்க்கட்சியினர் ஊர்வலங்கள் நடத்தினர். டாக்காவில் 9,000க்கும் மேற்பட்ட பொலிஸார் துணை இராணுவப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். வன்முறை எதுவும் நடந்ததாகத் தகவல் இல்லை. நகரின் அனைத்து முக்கிய பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது என்று உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டின் தென்கிழக்கு துறைமுக நகரான சிட்டகாங்கிலும் எதிர்க்கட்சியினர் ஊர்வலங்கள் நடத்தினர். இந் நகரிலும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது என்று நகர் தலைமை பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.


டாக்கா பிரதானபஸ் நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்திய எதிர்க்கட்சியினரைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்புகைக்குண்டுகளைபயன்படுத்தினர். இதில் அவாமி லீக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தைக் கண்டித்து அவாமி லீக் தலைமையிலான 14 கட்சிகள் அடங்கிய எதிர்க்கட்சி கூட்டணி இந்த வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

வங்கதேசத்தில் அடுத்த ஆண்டு ஜனவரியில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதை யொட்டி தேர்தல் சீர்திருத்தங்களை கொண்டு வர வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் கோரிவருகின்றன. தலைமை தேர்தல் ஆணையரையும் இரு உதவி ஆணையாளர்களையும் பதவிநீக்கம் செய்ய வேண்டும் என்பதும் எதிர்க்கட்சிகளின் முக்கிய கோரிக்கை ஆகும். (து)

# சுரங்க ரயில் விபத்து 41 பேர் பலியாகினர்

ஸ்பெயின் நாட்டில் சுரங்க ரயில் தடம் புரண்டதில் 41பேர் பலியானார்கள். 47பேர் காயம் அடைந்தனர். ஸ்பெயின் நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள வாலென்சியா நகரில் சுரங்கப்பாதை ரயில் ஒன்று ஜீசஸ் ரயில் நிலையம் அருகே சென்றபோது அதன் சக்கரம் உடைந்தது. இதனால் ரயிலின் 2 பெட்டிகள் தடம் புரண்டன. அப்போது ரயில் வேகமாக ஓடியதால் அது தலை கீழாக சாய்ந்தது. இந்த விபத்தில் 41பேர் பலியானார்கள். 47பேர் காயம் அடைந்தனர். அவர்களில் 12 பேர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர் 2 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இரவு நேரத்தில் இந்த விபத்து நடந்தது. ரயில் பெட்டிகளில் பிணமாக கிடந்தவர்களை மீட்பதற்காக மீட்புக்குழுவினர் வரவழைக்கப்பட்டனர். தலைக்குப்புற கவிழ்ந்த ரயில் பெட்டிகளில் சிக்கிக்கொண்ட பயணிகள் தங்கள் செல்போன் மூலம் அவசரப் பொலிஸிக்கு தகவல் கொடுத்தனர். பொலிஸார் விரைந்து சென்று 150 பயணிகளை மீட்டனர்.

அளவுக்கு அதிகமான வேகத்தில் ரயில் ஓடியதால்தான் இந்த விபத்து நடந்தது என்று அதிகாரிகள் கூறினார்கள். (து)



சீனா சென்றுள்ள லோக்சபா சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி அந்நாட்டு பிரதமர் வென் ஜியாபோவை சந்தித்து பேசினார்


# காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வுகாண வாய்ப்பு ஏற்பட்டுள்ளது பாக்.பிரதமர்

காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று பாகிஸ்தான் பிரதமர் செளகத் அஜீஸ் நம்பிக்கை தெரிவித்தார். நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகள் காரணமாக இந்தியா-பாகிஸ்தான் இடையில் சுமுக சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இரு தரப்பு உறவு, போக்குவரத்து வர்த்தகம் மேம்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வாய்ப்பு அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜெனீவாவில் பொது நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசுகையில் அஜீஸ் மேற்கண்டவாறு கூறினார். பிரதமர் அஜீஸ் மேலும் கூறுகையில்,

இந்தியாவுடன் நல்லுறவை மேம்படுத்திக்கொள்வதில் பாகிஸ்தான் முனைப்புடன் உள்ளது. அதே சமயம் காஷ்மீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும் என்பதிலும் அக்கறையுடன் உள்ளோம். இப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டால் இரு நாடுகள் இடையிலான வேறு பிரச்சினைகளும் முடிவுக்கு வரும் வாய்ப்பு உள்ளது. காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு என்பது பாகிஸ்தான் இந்தியா காஷ்மீரிகள் ஏற்றுக் கொள்ளும்வகையில் அமைய வேண்டும் இதில் பாகிஸ்தான் தனது பங்கை ஆற்ற தயார்நிலையில் உள்ளது. (து)





நேற்று காலை II.45 மணிக்கு நல்லூர் செங்குந்தா பொதுச் சந்தையின் இரண்டாவது நவீன மாடிக் கட்டடத்தொகுதிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வின்போது யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் மங்கள விளக்கேற்றுவதையும் அடிக்கல் நாட்டுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- திலீவின்பன்)

# பசுமாடுகளை இறைச்சிக்காக வெட்டுவதற்குத் தடை? ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இறைச்சிக்காகப் பசுமாடுகளை வெட்டுவது அதிகரித்துள்ளதால் அதனைத் தடுத்துநிறுத்த வேண்டியது மிகவும் அவசியம் எனக் கடந்த மாதம் நடைபெற்ற நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோண்டாவில் கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறு நல்ல பசுமாடுகளும் இறைச்சிக்காக வெட்டப்படுவதால் நல்லினமாடுகளின் எண்ணிக்கை குறைவடைவதுடன் பாலின் நுகர்வும் குறைவடைந்து போகும் நிலை ஏற்படுமென்றும் பிரதேச செயலருக்கு அவர் சுட்டிக்காட்டினார்.

பசுமாடுகளை இறைச்சிக்காக வெட்டுவது அனுமதிக்கப்படுவதில்லை எனவும் மலடுகளான பசுமாடுகளை மாத்திரம் இறைச்சிக்காக வெட்டலாம் என கால்நடை வைத்திய அதிகாரி எழுத்து மூலம் அனுமதி வழங்கினால் மாத்திரமே அவற்றை கொல்களத்தில் வெட்ட அனுமதிக்க முடியும் எனவும் நல்லூர் பிரதேச சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். இரவு நேரங்களில் மக்கள் குடியிருப்பற்ற பகுதிகளில் களவாக மாடுகள் வெட்டப்படுவது குறித்துத் தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், பொது மக்களினதும் பொலிஸாரினதும் உதவியில்லாமல் சுகாதாரப் பிரிவு மாத்திரம் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரியாலை, கோண்டாவில், கொக்குவில் பகுதிகளில் பல இடங்களில் இரவு நேரங்களில் களவாக மின்சாரம் பாவிக்கப்படுவதால் மக்களுக்குச் சரியான முறையில் மின்சாரம் வழங்க முடியாதிருப்பதாக இலங்கை மின்சாரசபையின் கொக்குவில் அலுவலக மின் அத்தியட்சகர் தெரிவித்தார். கிராம சேவையாளர், பொதுமக்கள், சமூக அமைப்புகள் பூரண ஒத்துழைப்பு வழங்கினால் இவற்றைத் தடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அரச வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சில குடியிருப்பு வீடுகளுக்கான மலசலகூடங்கள் கட்டப்படவில்லையெனவும் இதனால் மழைக்காலங்களில் தொற்றுநோய் பரவும் சாத்தியக்கூறுகள் உண்டு எனவும் அவர் சுட்டிக்காட்டினார். இவ்விடயம் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமெனப்பிரதேசசெயலர் தெரிவித்தார்.

இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட வுள்ள வீதிகள், தார் இடப்படவேண்டிய வீதிகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் பற்றியும் ஆராயப்பட்டது. இக் கலந்துரையாடலில் விவசாயம், கால்நடைவளர்ப்பு, தபால் விநியோகம் மற்றும் மீன்பிடி, தென்னை அபிவிருத்தி, கூட்டுறவு முதலிய அமைப்புகளின் பிரதிநிதிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கிராமிய, சமூக அபிவிருத்தி நிறுவனங்களின் பிரதி நிதிகளும் கலந்துகொண்டனர். (து-252)

# யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்களின் கவனத்துக்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக்கல்லூரியில் 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற வேண்டிய இறுதிப் பரீட்சைகள் யாவும் ஆகஸ்ட் 14ஆம் திகதி ஆரம்பமாகும் என யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் யோகராஜன் அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் 2005 டிசம்பர் மாதம் நடைபெற வேண்டிய பயிற்சி நெறிகளின் முடிவில் தலைமைத் திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற ஆண்டிறுதிப் பரீட்சைகள் யாவும் 2006ஆகஸ்ட் 14ஆம் திகதி முதல் தொடங்கி 10 நாட்களுக்குள் நடாத்தி முடிப்பதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற வேண்டிய ஆண்டிறுதிப் பரீட்சைகள் அப்போது நிலவிய சூழ்நிலை காரணமாக மாணவர்களினால் பரீட்சைக்கு தோற்ற முடியாத காரணத்தால் பரீட்சைகள் தடைப்பட்டது. இவ்விடயம் சம்பந்தமாக கடந்த வாரம் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும், பரீட்சை பணிப்பாளருக்குமான சந்திப்பின் போது அதிபரினால் மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு என்பவற்றை விளக்கியதை அடுத்து இப்பரீட்சையை உடன் நடாத்துவதற்கான விசேட உத்தரவு பெறப்பட்டது.

ஆகவே தோற்றவேண்டிய மாணவர்கள் உடனடியாக பரீட்சைக்கு ஆயத்தமாகும்படி கேட்கப்பட்டுள்ளது. பரீட்சைக்கான நேரகால அட்டவணை அடுத்த இரு வாரங்களுக்கு கல்லூரி விளம்பரப்பலகையில் பார்வைக்கு வைக்கப்படும்.

2005ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றுவதற்காக திணைக்களத்தால் வழங்கப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையையே இப் பரீட்சைக்கும் பாவிக்கவேண்டும். இதுவரை அனுமதி அட்டைகளைப் பெறாதவர்கள் ஜுலை 21ஆம் திகதி காரியாலயத்தில் வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என அதிபர் யோகராஜன் தெரிவித்தார். (க)

குற்றம் அற்றவரை - ஒன்றும் அறியாதவரை - நிராகரித்து தண்டிப்பது எவ்வளவு வெட்கக் கேடான காரியம்.

-சாக்ரட்டீஸ்

வலம்புரி

# தென்னிலங்கையில் அதிகரிக்கும் தமிழர்கள் மீதான கெடுபிடி

ஈழத் தமிழர்கள் இலங்கையின் எப்பாகத்தில் வாழ்ந்தாலும் அவர்களின் வாழ்வியல் அச்சம் நிறைந்ததாகவே காணப்படுகின்றது.

தமிழர் தாயகத்தில் முப்படையினரும் ஆயுதத்தை ஏந்தியவாறு எந்நேரமும் சுடத் தயாராகவுள்ளனர்.

வெடிச்சத்தம் கேட்டால் போதும் தூக்கி வைத்திருக்கும் துவக்குகளுக்கு வேலை கொடுப்பதே வேலை என்பது படையினரின் கடமையாகவுள்ளது.

அடைபட்ட சிறைக்குள் வாழ்கின்ற பரிதாபம் யாழ்.குடாநாட்டில் இருப்பது வேதனைக்குரியது. சோதனை, தேடுதல், கைதுஎனப் பலவாறான துன்பங்களை அனுபவித்துவரும் யாழ்.குடாநாட்டு மக்கள் யுத்த சூழ்நிலைக்குள் தமது நாளாந்த வாழ்க்கையை நகர்த்த வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

இது அவர்களின் தாயகப் பகுதியில் நடக்கும் நிட்டூரம்.

மறுபுறத்தில் ஈழத் தமிழர்கள் என்ற பெயரால் இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் படையினர் நடத்தும் சோதனை நடவடிக்கைகள் தனி மனித உரிமைகளையும் தனி மனித கௌரவத்தையும் பாதிப்பதாகவுள்ளது.

குறிப்பாக வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டத்திற்கும் செல்லும் தமிழ்ப் பயணிகள்மீது படையினர் நடத்தும் சோதனைகள் அப்பாடா! என்றாகி விட்டது.

உடற்சோதனை, உடைமைச் சோதனை என தமிழர்கள்மீது நடத்தும் கெடுபிடிகள் இலங்கையில் தமிழர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதை உறுதி செய்வதாகவுள்ளது.

இதற்கு அப்பால் இப்போது தென்னிலங்கையில் சுற்றிவளைப்பு, தேடுதல் என்ற பெயரில் தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்படுகின்றனர்.

எந்நேரமும் இச் சுற்றிவளைப்புக்கள், கைதுகள் நடக்கலாம் என்ற நினைப்போடு தமிழர்களின் தென்னிலங்கை வாழ்க்கை நகர்கின்றது.

இதைவிட இன்னும் சில நாட்களில் வதிவிட பாஸ் முறையை பொலிஸார் அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

அதாவது தமிழ் மக்கள் யாரேனும் தென்பகுதியில் வாடகைக்கு அல்லது உறவினர்களின் வீடுகளில் தங்குவதாயின் அதற்கு முன்னதாக அப்பகுதிப் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்ய வேண்டும்.

எப்படியிருக்கின்றது தமிழர்களின் உரிமை.தனது உறவினர்களின் வீட்டிலோ அல்லது வாடகைக்கு எடுத்த வீட்டிலோ தங்க முடியாத நிலையே தமிழ் மக்களுக்கு இருக்கின்றது.

இவ்வாறு பொலிஸ் பதிவுகளை செய்வதன் ஊடாக லஞ்சம் வாங்கும் முறைமையும் கூடவே அறிமுகமாகும்.

இத்தகைய வருமானம் சார் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதில் படையினரின் வேகம் அதியுயர் வாகவேயுள்ளது.

# மூளையில்லா முண்டங்களென படையினரை தூற்றும் ஜே.வி.பி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை தோற்கடிக்க இராணுவத்தினருக்கு மூளையிருக்க வேண்டுமென்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறு மூளையில்லா முண்டத்தினால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்றும் அவர் சாடியுள்ளார்.

கொழும்பு நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடிக்க இராணுவத்திடம் போதிய தகவல்கள் இல்லை. அவர்களால் புலிகளை தந்திரோபாயமாக தோற்கடிக்க முடியாது. நாட்டில் யுத்தம் இடம்பெறவில்லை.ஆனால் பயங்கரவாதம் உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக இராணுவம் வலுவிழந்துள்ளது. இதன் காரணமாகவே இராணுவ உயர் அதிகாரிகள் கொல்லப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஜே.வி.பியினரை அழிக்க முயற்சிக்கின்றனர். அதற்கு தாம் அச்சமடையப் போவதில்லை என்றும் தெரிவித்தார். (க-9)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் இல்ல பொறுப்பாளர்களுடனான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நாளை சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண நீதி நிர்வாக எல்லைக்குட்பட்ட சகல சிறுவர் இல்லங்களினதும் பொறுப்பாளர்கள் கலந்துரையாடலுக்கு சமுகமளிக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் கேட்டுள்ளார்.

மேலும் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த நிர்வாக உத்தியோகத்தர்கள், நன்னடத்தை அதிகாரிகள், நிகழ்ச்சி திட்ட உதவியாளர்கள் ,சிறுவர் உரிமை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், உளவள துணை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரையும் தவறாது சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (க)

## கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கு ஆசிரிய நியமனம்

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கல்வியியற் கல்லூரியில் பயிற்சியை முடித்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 97 மாணவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்காக கடந்த வாரம் இரண்டு நாட்கள் யாழ். கல்வி வலயத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு 94 மாணவர்கள் மாத்திரமே தோற்றினர்.

நேர்முகப் பரீட்சையின் முடிவுகள் மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் ஆசிரிய நியமனம் தொடர்பான நியமனக்கடிதம் அடுத்த வாரமளவில் வெளியாகுமென யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (து-133)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் செ.சிவநடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி க.தேவராஜாவும் சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (க-9)

## நாய் வளர்ப்பவர்களிடமிருந்து கட்டணம் அறவிட நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு உட்பட முழு நாட்டிலும் விசர் நாய்க்கடிக்குள்ளாகி தினமும் 2ஆயிரம் பேர் அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற வருவதாக சுகாதார பராமரிப்பு போஷாக்குத் துறையமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு சிகிச்சை அளிக்கவென ஒருவருக்கு ஆயிரத்து 500ரூபா என்ற ரீதியில் தினமும் 30 இலட்சம் ரூபாவை செலவிடவேண்டியுள்ளது. இதேவேளை நாய் வளர்ப்பவர்கள 100 ரூபாவோ அல்லது 200ரூபாவோ செலுத்தக் கூடியவகையிலான சட்டம் விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

விசர் நாய்க் கடியைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டுவதற்கான வாரம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்து உரை யாற்றுகையில், இலங்கையில் 25 இலட்சம் நாய்கள் உள்ளன. இந் நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது உடனடித் தேவையாகவுள்ளது.

அதேநேரம் நாய்கள் மனிதர்களைக் கடிப்பதைக் குறைக்கவும் விசேட கவனம் செலுத்துவது அவசியமாகும் . இதற்காக மக்களுக்கு அறிவூட்டப்படவேண்டும். இத் திட்டத்தின் கீழ் அறிவூட்டும் பணிகள் வடக்கு-கிழக்கு உட்பட முழு நாட்டிலும் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. இப்பணிகள் பாடசாலை மட்டத்திலும் பொதுமக்கள் மட்டத்திலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாய்களை கொல்வதில்லையென கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. இதனாலேயே நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவென இனப்பெருக்கக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார். (க)

## 536 குளங்கள் புனரமைப்பு

நாடளாவிய ரீதியில் 10 ஆயிரம் குளங்களைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் 536 குளங்கள் புனரமைக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இந்த வருடம் முதல் 6 மாத காலப் பகுதியினுள் மேற்படி 536 குளங்களும் புனர மைப்பட்டுள்ளன.

இந்த வருட முடிவுக்குள் மேலும் 784 குளங்கள் புனர மைக்கப்படவுள்ளன. இவற்றில் 72 குளங்களை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க)

## படையினரின் சோதனைகளால் பயணிகளின்றி செல்லும் பஸ்கள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

வீதி ஓரங்களில் நிற்கும் படையினர் சிறு சிறு இடைவெளிகளில் வீதியில் செல்லும் வாகனங்களை மறித்து சோதனை செய்வதுடன் தமது வாகனத் தொடரணிகள் வரும்வரை மணித்தியாலக் கணக்கில் வாகனங்களை நிறுத்தி வைக்கின்றனர்.

இதனால் காரியாலயங்களுக்கு செல்பவர்களும் வைத்தியசாலைக்கு செல்பவர்களும் பெரும் அவதிக்குள்ளாவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதேவேளை, இ.போ.சபை பயணிகள் பேருந்துகளும் தனியார் சிற்றூர்திகளும் இவ்வாறு காலநேரம் அற்று நிறுத்தி வைக்கப்படுவதனால் நேரக் கணிப்பின்படி சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்திகள் பல ஒரே நேரத்தில் ஒன்றன் பின் ஒன்றாக சேவையில்ஈடுபடுகின்றன. இதனால்பலசிற்றூர்திகள்பயணிகள் இல்லாமல் பயணிப்பதை காணக்கூடியதாக உள்ளது.(க-55)

## காலக்கெடு நீடிப்பு

(கொழும்பு)

விதவை, அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பெண் அரச ஊழியர்களையும் சேர்த்துக் கொள்வதற்கான காலக்கெடு எதிர்வரும் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக மேற்படி திட்ட அலுவலகத்தின் நிர்வாக அதிகாரி சுமணா விஸ்வநாத தெரிவித்துள்ளார்.

இதற்கான கால அவகாசம் கடந்த ஆண்டு நிறைவு பெற்றது. இருந்தபோதிலும் பெண் அரச ஊழியர்கள் இத் திட்டத்தில் இணைவதன் மூலம் கிடைக்கவிருக்கும் நன்மைகள் தொடர்பாக தெளிவான விளக்கம் கிடைக்கப்பெறாமையினால் இச் சந்தர்ப்பத்தை பலர் கைவிட நேர்ந்துள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்தே மீண்டும் கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளதாக சுமணா விஸ்வநாத தெரிவித்தார். இது சம்பந்தமான சுற்றறிக்கை வெகு விரைவில்சகல அரச அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

## மின்சாரம் தடைப்படும்


(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச அலுவலகம் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு பின்வரும் இடங்களில் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் மாலை 5.00மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவித்துள்ளது.

கந்தரோடை,மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல்,வட்டுக்கோட்டை ,சுழிபுரம், மூளாய், காரைநகர் ஆகிய பகுதிகளிலேயே நாளை சனிக்கிழமை மின் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பராமரிப்பு வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

### தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



நன்மையை நாடி நன்மையின் வழியில் செல்லும்போது நன்மையே துணையாக நிற்கும். தீமை வழியில் சென்றால் தீமை தான் துணையாக வரும்.

சுவாமி விவேகானந்தர்

# இலங்கைப் பிரச்சினையில் இருந்து இந்தியா விலகி நின்று விட முடியாது

## தினமணி தலையங்கம் தெரிவிப்பு

இலங்கை பிரச்சினையில் இருந்து முற்றாக இந்தியா விலகி நின்றுவிட முடியாது என்று தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் தினமணி நாளேட்டின் தலையங்கம் தெரிவித்துள்ளது.

அதன் விபரம் வருமாறு;

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்று வந்த பேச்சுவார்த்தை தடைப்பட்டு நிற்கும் சூழ்நிலையில் இலங்கையில் அண்மைக் காலமாக வன்முறை வெடித்துள்ளது.

அவ்வப்போது நடந்துவரும் மோதல்கள் காரணமாக இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையே முழு அளவிலான போர் ஏற்பட்டு விடுமோ என்ற பதற்ற நிலை உருவாகியுள்ளது.

இதற்கிடையில் தற்போதைய அசாதார சூழ்நிலை காரணமாகஇலங்கையின் வட-கிழக்கு பகுதிகளிலிருந்து தங்களது உயிரை காத்துக் கொள்வதற்காக இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழகத்திற்கு வரும் கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளனர்.

இலங்கைப் பிரச்சினையில் ஏற்கனவே நேரடியாகத் தலையிட்டு கையைச் சுட்டுக் கொண்ட இந்திய அரசு தற்போதைய சூழ்நிலையில் நேரடியாகத் தலையிடாது என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் இலங்கைப் பிரச்சினையிலிருந்து முற்றாகவும் இந்தியா விலகி நின்று விடவும் முடியாது. இலங்கையில் மீண்டும் வன்முறைக் கலவரங்கள் தொடர்ந்தால் இந்தியாவுக்குவரும் அகதிகள் பிரச்சினையை சமாளிக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அங்கு வன்முறைக் கலவரங்களுக்கு முடிபு கட்டி அமைதி ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதில் இந்தியாவின் தீவிர அக்கறையை வெளியுறவுச் செயலர் வெளிப்படுத்தியுள்ளார்.

அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்ல சாத்தியமானவற்றைச் செய்ய இந்தியா தயாராகவிருப்பதாக அவர் கூறியுள்ளபோதிலும் இலங்கை அரசுதான் அது குறித்து முடிபு செய்ய வேண்டும் என்று எச்சரிக்கை உணர்வுடன் கூறியிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

இலங்கையில் அமைதிப் பேச்சுவார்த்தை தொடர வேண்டும் என்பது இருதரப்பினருக்கும் இடையே சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் நாடுகளின் வேண்டுகோள் மட்டுமல்ல இந்தியா போன்ற அண்டை நாடுகளின் கருத்தும் அதுதான்.

எனவே சமரசப் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதில் இலங்கை அரசுக்கு மட்டுமன்றி விடுதலைப்புலிகளுக்கும் பொறுப்பு இருப்பதை மறந்துவிடக் கூடாது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் -நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

நாளை சனிக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை தேர்த் திருவிழாவும் நடைபெறும்.

மறுநாள் திங்கட்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் செவ்வாய்க்கிழமை மாலை பூங்காவனமும் புதன்கிழமை விசேட சங்காபிஷேகமும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தேரடி வைரவர் பொங்கலும் இடம்பெறும். (கு-9)

## ஊடகவியலாளர் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

கொழும்பு தெஹிவளைப் பகுதியில் வைத்துகடந்த வாரம் இனந்தெரியாத துப்பாக்கி நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட சுயாதீன ஊடகவியலாளர் லக்மால் சம்பத்தின் படுகொலையினை கண்டித்து நேற்று கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக பல்வேறு ஊடக அமைப்புக்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் ஒன்று சேர்ந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் பத்திரிகையாளர் அனைவரும் ஒன்று திரண்டு சம்பத்தின் படுகொலையினை கண்டித்ததோடு கொலைச் சூத்திரதாரிகளை உடன் கண்டு பிடித்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று அறைகூவல் விடுத்தனர்.

ஊடகவியலாளர்களுக்குஎதிராக விடுக்கப்பட்டுவரும் அச்சுறுத்தல்களுக்கு எதிரான பதாகைகளையும் அவர்கள் தாங்கிய வண்ணம் தமது எதிர்ப்பினை வெளியிட்டனர். (ச-5)

## இராணுவத் தளபதி மீதான தாக்குதல் தற்கொலைதாரி கர்ப்பிணி அல்ல

### பொலிஸ் மா அதிபர் தகவல்

இராணுவத் தளபதி சரத்பொன்சேகாமீது தாக்குதல் நடத்திய தற்கொலைப் பெண் கர்ப்பிணி அல்ல என்று பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா மீது தற்கொலைத் தாக்குதலுக்கான திட்டம் ரம்புக்கனைப் பகுதியில் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்கொலைதாரிஅநுராதபுரம் குருநாகல் வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மஞ்சுளாதேவி எனவும் அப்பெண்ணின் உடற்பாகங்களை சோதனைக்குட்படுத்திய போது அவர் கர்ப்பிணி அல்ல என்பதும் தெரிய வந்துள்ளது என்றார் சந்திரா பெர்னாண்டோ. (ச-5)

## ம.உ.ஆணைக்குழு அதிகாரியை சந்திக்குமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கைது செய்யப்பட்டோர் மற்றும் காணாமல் போனோர் தொடர்பாக யாழ். மனித உரிமை ஆண்க்குழுவில் முறைப்பாடு செய்தோரில், கீழ்வருவோரை தன்னிடம் தொடர்பு கொள்ளுமாறு மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி சுவேந்திரராஜா கேட்டுள்ளார்.

காணாமல் போனோர் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவின் கொழும்புத் தலைமையகத்தினால் கீழ் குறிப்பிட்டோரை சந்தித்துத் தகவல் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதால் உடனடியாக தன்னைச் சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அழைக்கப்பட்டோரின் விபரம் வருமாறு.

வ.தயாளினி,(பறிச்சான் கோட்டம் நாவற்குழி), கணபதி கதிர்வேலு (240,2 ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்),இராசையா (ஐயனார் கோவிலடி கொடிகாமம்), க.இராகுலன் (240A, 2 ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்), ஜெயசேகர் (பிள்ளையான்குளம் யாழ்ப்பாணம்), ந.சத்தியசீலன்(பனிப்புலம் பண்டத்தரிப்பு), சு.சிவாஜனி (உரும்பிராய் கிழக்கு உரும்பிராய்), தி.அசோகன் (மல்லிகா பண்ணை சங்கானை), செ.ஆனந்தன் (மட்டுவில் வடக்கு சாவகச்சேரி). (ச-5)

## கடற்படையின் அதிகாரி...

சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்த 8 இளைஞர்கள் கடற்படை யினரால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக் கப்பட்டது.

இதேவேளை நேற்று இராணுவம்மீது பரவலாகத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

துன்னாலைப்பகுதியில் அடையாளம் தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

கொடிகாமம் வீதி துன்னாலைச் சந்திப் பகுதியில் அமைந்துள்ள இராணுவக் காவலரண் மீது நேற்று பி.ப.3 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற அடையாளம் தெரியாத நபர்கள் தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரியவருகின்றது.

இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்திய போதிலும் தாக்குதல் நடத்தியவர்கள் எவ்வித பாதிப்பும் இன்றி தப்பிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.வேலணை கடற்படையினர்மீது நேற்று மற்றுமொரு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காலை 10.30 மணியளவில் வீதிச் சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர்மீது அடையாளம் தெரியாத நபர்களினால் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் இரு கடற்படையினர் படுகாயமடைந்து காங்கேசன்துறை கடற்படை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

கோண்டாவில் பேருந்து நிலையம் அருகே நேற்றுக் காலை 10.40 மணியளவில் 5 கிலோ எடையுள்ள கிளைமோர்க் கண்ணிவெடியை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

பலாலி ஊடகச் செல்லும் இராணுவ வாகனத்தை இலக்கு வைத்து இக் கிளைமோர் ஒளித்து வைக்கப்பட்டிருக்கலாம்என இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன. (ச-132,133)

## அவசர...

தி.மகேஸ்வரன் ஆகியோர் அவசர காலச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர்.

ஐக்கியதேசியக் கட்சியும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன வாக்கெடுப்பில் பங்கேற்காது வெளியேறின. (ச-5)

## க.கா.குழுவில் இடம்பெறுபவர்...

இடம்பெறுகிறதெனில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலுள்ளஇருதரப்பினரது பொறுப்புத்தான் அது. யுத்தநிறுத்த ஒப்பந்தம் என்பதை கண்காணிக்கின்ற ஓர் அமைப்புத்தான் கண்காணிப்புக் குழு.

600பேர் வரையில் கொல்லப்பட்டிருப்பது என்பது மிக அதிகபட்ச வன்முறைதான். அதை உக்கிரமற்ற தணிவான யுத்தம் என்று சொல்லாம். அதை யுத்தம் என்று அரசாங்கமோ விடுதலைப்புலிகளோ கருதலாம்.

நாளாந்தம் படுகொலைகள் இடம்பெறுகின்றன. கொழும்பு இராணுவத் தலைமையகத் தாக்குதலைப் பொறுத்தவரையில் விடுதலைப்புலிகளுக்குத் தொடர்பு உள்ளது என்பதற்கான ஆதாரம் எம்மிடம் இல்லை.

இது தொடர்பாக இராணுவத்திடம் பலமுறை கேட்டு விட்டோம். இராணுவத் தலைமையகத்தில் விசாரணைமேற்கொள்ள அனுமதியளிக்கவில்லை.

சம்பவப் பகுதிக்குள் நுழையாமல் நாம் தீர்மானிக்க முடியாது. இதுவரையும் அரசாங்கத் தரப்பிலிருந்து ஆவணங்கள் எதுவும் தரவில்லை.

கருணா குழுவிற்கும் அரசாங்கத்திற்கும் தொடர்பிருப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டுக் குறித்த ஆதாரத்தை அரசாங்கம் எம்மிடம் கேட்டது.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தான் கருணா குழு இயங்குகின்றது என்பதற்கான ஆதாரங்கள் போதுமான அளவு உள்ளன. அதை அரசாங்கத்திடமும் கையளித்துள்ளோம் என்றார் அவர். (ச-5)

## சகல இனத்தவருக்கும்...

காட்ட முயற்சிக்கின்றார். ஆனால் பல தமிழ் அரசியல் கட்சிகள் அரசுடன் இணைந்து செயற்படுவதானது இவரின் கூற்றைப் பொய்ப்படுத்துகின்றது.

நெருக்கடியான நிலைமை நிலவிய போதிலும் சமாதானத்தீர்வு ஒன்றை எட்டுவதற்கு பேச்சுவார்த்தை மூலமே முடியும் என்ற நிலைப்பாட்டில் அரசு உறுதியாகவுள்ளது.

எமது நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு சகலரும் ஏற்றுக் கொள்ளும் அரசியல் தீர்வு மூலமே முடிபு காணலாம்.

இதற்காகவேண்டி ஜனாதிபதி நிபுணத்துவ ஆலோசனைக் குழு ஒன்றையும் நியமித்துள்ளார். இக் குழு எதிர்வரும் 11 ஆம் திகதி முதன் முறையாக ஜனாதிபதியின் தலைமையில் கூடவுள்ளது.

இக்குழு உலகிலுள்ள அதிகாரப் பகிர்வு முறைகளை ஆராய்ந்து இலங்கைக்கு ஏற்ற தேசிய தன்மை கொண்ட ஓர் அதிகாரப் பகிர்வை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதுஎன அமைச்சர் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களால் பல தசாப்தங்களுக்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட இலங்கையின் ஒற்றையாட்சி முறையின் கீழ் அதிகாரப் பகிர்வு என்பது குறித்தபேச்சுவார்த்தைக்கு அரசு அழைப்புவிடுத்துள்ளமை சர்வதேச சமூகத்தினை ஏமாற்றும் திட்டம் என்பதுடன் ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்த அரசு தவறி வருவதாகத் தமிழ்ச்செல்வன் நேற்று முன்தினம் குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## சிங்கள...

யின் புத்தளம் பாராளு மன்ற உறுப்பினர் ரங்க பண்டார கூறியதாவது,

சிங்கள ஊடகவியலாளர் படுகொலையில் தொடர்புடையோர் யார் என்பது அம்பலமாகிவிட்டது. இராணுவத்தின் லெப்டினன் ஒருவரும் அவரது சகாக்களும் லக்மல் சம்பத்தின் படுகொலைய்யில் தொடர்புடையவர்கள் என்று எங்களுக்குத் தெரிய வந்துள்ளது.

அவிசாவலையில் ஐந்து தமிழர்கள் தலை துண்டிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையோரை லக்மல் சம்பத் அறிந்திருந்தமையினால்தான் அவர் கொல்லப்பட்டுள்ளார் என்றார் ரங்க பண்டார. (ச-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.